
பொன்னி
NA-1

'பொன்னி' வெளியீடுகள்

திருவள்ளுவரும் திராவிடக்கொள்கையும் 0—2—0

திருக்குறள் முனிசாமி

அந்நாளில் திருவள்ளுவர் வகுத்த திராவிடக்கொள்கைகளை வெளிப்படையாக அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இதோ திராவிடர் பண்பாடு என்று வீரமுடன் எடுத்துக்காட்டும் அருமையான புத்தகம்.

தேய்ந்த விரல் 0—4—0

திருக்குறள் முனிசாமி

காதலியின் உள்ளத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன என்று வியந்து, கண்டறியாதன கண்டோம் என்று, படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் பேரின்பம்அடைகின்ற காதல் நூல்.

வடலூரும் ஈரோடும் 0—4—0

திருக்குறள் முனிசாமி

சமய வாதியான வடலூர் இராமலிங்க அடிகள் சமயத்தை வெறுத்து எவ்வாறு ஈரோட்டுப் பெரியாரின் கொள்கைகளை அப்படி அப்படியே பல ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறார் என்பதை விளக்கும் ஆராய்ச்சி நூல்

வள்ளுவரும் பெரியாரும் 0—8—0

திருக்குறள் முனிசாமி

பெரியாரின் அழகிய திருவுருவுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில், வள்ளுவர் வகுத்த தமிழ் நெறி, பெரியார் வாழ்வில் அமைந்திருப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். வேகமான நடை. சிந்தனையைக் கிளறும் கருத்துக்கள். படித்து முடித்ததும் பெரியார்தான் இன்றைய வள்ளுவர் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும்

ஈரோட்டுத் தாத்தா 0—4—0

நாரா. நாச்சியப்பன்

நெஞ்சை யள்ளும் இன்பத் தமிழில் பெரியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார் தோழர் நாச்சியப்பன். வெறும் வரலாறாய் இல்லாமல் ஆங்காங்கே கற்பனை வளமும் அணிச்சிறப்பும் நூலை அழகு செய்கின்றன. பெரியாரைப் பாடும் முதல் கவிதை நூல் இதுதான்!

கோயில் பெருச்சாளிகள் 0—6—0

தில்லை வில்லாளன்

கோவிலிலே, காவற்காரன் முதல் காசு வாங்கும் பார்ப்பான் வரை, ஒவ்வொரு பெருச்சாளியும் செய்கின்ற ஆபாச லீலைகளைத் தனக்கென அமைத்த விறுவிறுப்பான தமிழில் அப்பட்டமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 39 — புதுக்கோட்டை

பொன்னி

பொருளடக்கம்

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

துணை ஆசிரியர்:
நாரா நாச்சியப்பன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

மலர் 2 :: திருவள்ளுவர் ஆண்டு 1979 :: விலை அணு 5
இதழ் 7 :: ஆனித்திங்கள் 32-ம் நாள் :: 15—7—48

போர் முரசு கேட்கிறது!

ஆம். போர்முரசு கேட்கிறது! "இந்தி தமிழ் நாட்டினின்றும் ஏக வேண்டும்" என்ற, ஒரே உறுதியான கோரிக்கையில் தமிழ் நில மக்கள் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள். கல்வியமைச்சருக்கு நாட்டிலுள்ள எதிர்ப்பைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் சென்னை இந்தி எதிர்ப்பாளர் மாநாடு நடைபெறவிருக்கிறது. அம் மாநாட்டில் செய்யப்படும் முடிவுகள் தமிழகத்தார் செய்யும் முடிவுகளேயென்று கருதலாம். காரணம் அது ஒரு கட்சியால், ஒரு சிறு கும்பலால் கூட்டப்படுவதல்ல. அம் மாநாட்டில் காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொள்கிறார்கள்; தமிழ்நாடு தமிழருக்காக வேண்டுமென்றெண்ணுகின்ற 'தமிழர் கழக'த்தார் கலந்துகொள்கிறார்கள். இனமுரசினை நாட்டின் இதய ஒலியாக்கிய திராவிடக் கழகத்தார் பங்குகொள்கிறார்கள். தமிழின் கரைகண்ட பெரும் புலவர்கள் அம் மாநாட்டின் முன்னணி வீரர்களாகக் காட்சியளிக்கப் போகிறார்கள். தமிழ்மொழிப் பற்றுக்கொண்ட யாவரும் அம் மாநாட்டில் கலந்துகொண்டே யாகவேண்டுமென்ற சூழ்நிலையிலே அது நிகழவிருக்கிறது. தமிழகத்தின் 'முற்போக்குச் சக்திகள்' இந்தி எதிர்ப்புக் களத்திலே ஒன்றுகூடவிருக்கின்றன. எனவேதான் அம் மாநாடு தமிழகத்தின், தமிழ் நன் மக்களின் கருத்தினை அரசினர்க்குப் புலப்படுத்தும் அரங்கமாகத் திகழப் போகிறதென்று கூறினோம்.

கல்வியமைச்சருக்குத் 'தரும சங்கடமான' நேரம் இது! நாம் அறிவோம்; அவர் மனப் பூர்வமாக இந்தியை நம் சிறார்கள் மீது திணிக்கவில்லையென்று; முதலில் போட்ட 'விருப்பப் பாட உத்தரவே' அதனை விளக்கப் போதுமானது. மேலிடத்தார் அவரைத் தூண்டுகிறார்கள் அல்ல கட்டளையிடுகிறார்கள் என்றே நாம் கருதவேண்டியிருக்கிறது. எது எப்படியாயினும் நாம் — தமிழக வாழ்விலே கருத்துள்ள அனை

வரும் — இந்தியை எதிர்த்துத்தான் தீரவேண்டியிருக்கிறது. கல்வியமைச்சர் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்; தம் அரிய நண்பர்களைக் கலந்தாலோசிக்கவேண்டும். அவர் நினைத்தால் போராட்டத்தை, அமைச்சர் குழுவிற்கு வர இருக்கும் எதிர்ப்பைத் தவிர்க்கலாம். அப்படி அவர் தம் கருத்தை மாற்றிக்கொள்ள அவர் 'பதவி' இடம்தராவிட்டால் அங்கே ஒட்டிக்கொண்டிருப்பதைவிட, தொடர்பை வெட்டிக்கொண்டு வெளியேறுவதே மேல் என்று அவருக்குக் கூறவிரும்புகிறோம். உண்மையிலேயே கல்வியமைச்சரிடம் நாம் அன்பு கொண்டிருப்பதால்தான் இத்தகு ஆலோசனையை இந்நேரத்தில் அவருக்குத் தரவிழைகிறோம். காரணம் தமிழிடத்திலே கல்வியமைச்சருக்குப் பற்று இருக்கிறது என்பதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். அத் தமிழ்ப்பற்று சரியான நெறிகளில் செல்கிறதா, இல்லையா என்பதல்ல இங்கு பிரச்னை. அவர் திருக்குறளைப் பள்ளிகளில் கட்டாயமாக்கினாரே, அப்போது அவருடைய தமிழ் உள்ளத்தை நாம் காணமுடிந்தது! தமிழுக்குக் களஞ்சியம் சேர்க்கப் பெரு முயற்சி செய்தாரே அப்போதெல்லாம் அவர் மொழிப்பற்று நமக்கு விளக்கமாகிறது! அரசாங்கத்தில் தமிழ்க் கவிஞர் ஒருவரை ஏற்படுத்துவோம்; அவருக்குப் பரிசு தருவோம் என்று அவர் அறிவித்தபோது, தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசளிப்பதாக அவர் திட்டம் கொண்டுவந்து நடைமுறையில் செய்தபோது, தமிழைப் பள்ளிகளில் முதன் மொழியாக்கிச் சிறப்பித்தபோது, தமிழிலே அரசினர் அலுவல்கள் நடைபெற வேண்டுமென்று 'முதல் முயற்சி' தொடங்கியபோது நாம் அவர் தமிழ்நாட்டுக் கொண்டுள்ள அளவு கடந்த ஆர்வத்தைத் தெரிந்துகொள்ள முடிந்தது. "இத்தகைய போக்கினர் எம் கல்வியமைச்சர்; எனவே இந்தி எங்ஙனம் இங்கு வரும்?" என்று இறுமாந்திருந்தோம் நாங்கள். 'கண்ணன் காட்டிய வழியில்' அவர் செல்வார் என்று நாங்கள் கனவிலும் கருதவில்லை. ஆச்சாரியார் பெற்ற தோல்வி அவர் போக்கிற்கு அணைபோடும் என்று உறுதியாக எண்ணியிருந்தோம்; ஆங்கிலம் வந்தது, மக்களின் அறிவு விரிவுக்குப் பயன்பட்டதேனும், அது அடிமை மனப்பான்மையை நம்மிடம் பதியவிட்டுச் சென்றதை நாம் மறுக்கமுடியாது. அம்மனப்பான்மையைக் கல்லி எறிய இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ நாம் அறியோம்! அப்படியிருக்க, இந்திவருவதும், அது 'எசமானர் மொழி'

யாவதும் அவர் கொள்கைக்கு ஒத்துவாரா என்று நாங்கள் கருதியிருந்தோம். "இந்தியைப் பொதுமொழி யாக்குவதென்று திட்டமிருக்கிறதேயொழிய, அது இந்தியாவின் எந்தப் பகுதிகளில் நடைமுறைக்குக்கொண்டுவரப்பட்டிருக்கிறது? எந்த மாகாணம் இந்தியைக் கட்டாயமாக்கியிருக்கிறது, இந்தியைச்சொந்தத் தாய்மொழியாகக் கொண்ட மாகாணங்கள் தவிர" என்று டில்லியில் கேட்டு வைப்பார்; இந்தியை வரும் வழியிலேயே மறித்து ஓட்டுவார் என்று அமைதி கொண்டிருந்தோம்.

ஏமாந்தோம்; எங்கள் எண்ணத்தில் மண் விழுந்தது. சென்னை அமைச்சர் பதவியில் ஆச்சாரியார் இருந்தாலும்சரி, அவினாசியார் இருந்தாலும் சரி, 'இந்தி கட்டாயம்' என்ற திட்டத்தை மட்டும் நிறைவேற்றி வைப்பது கடமை என்பதைத் தெரிந்து கொண்டோம். கல்வியமைச்சரைத் தமிழின் காவலர் என்று எண்ணினோம்; டில்லி ஆட்சியின் ஏவலர் என்பதை மறந்தோம்! இந்தி பள்ளிகளிலே இப்பொழுது கட்டாயபாடம்; ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள்—இது கனவல்ல; நிகழ்வது இன்று!

கல்வியமைச்சர் நாட்டு நிலையை, மக்களிடத்திலே மண்டி வளர்ந்துள்ள மொழி யார்வப் பயிரைக் கருத்திற் கொள்ளவேண்டும். அன்பின் சிகரமாக வார்க்கப்பட்டு வந்த பாத்திரம் திடீரென ஆணவப் பிண்டமாக மாறினால் எப்படியிருக்குமோ நாடகப் போக்கு, அப்படியிருக்கிறது இன்று அன்பர் அவினாசிலிங்கனார் போக்கு! நம் உள்ளங்களில் இதுவரை அவர் படிந்திருந்த விதம் வேறு! இன்று அச்சித்திரத்தை முற்றும் அழித்துவிட்டு வேறொன்று எழுதித் தீரவேண்டிய அளவுக்கு அவர் போக்கு மாறிவிட்டது. "தீங்கரும்பின் சாறு" என்று நாம் எண்ணி அதனைப் பருகப் போம்போது "அது நஞ்சன்றோ!" என்று அருகிலிருப்போர் கூறினால் எப்படி நாம் திடுக்கிடுவோமோ, அப்படித் திடுக்கிட்டோம் கல்வியமைச்சர் இந்தியைக் கட்டாயம் என்று அறிவித்தபோது! இத்திட்டத்தை, இப்போக்கினை, தமிழுக்கு நஞ்சூட்டும் இயல்பினை அவர் மாற்றிக்கொள்ள வேண்டும். 'தமிழன்பராக'க் காட்சியளித்த அவர் 'என்றுமே அன்பராக' இயங்க வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டே இத்தனை பரிவோடு இவ்வேண்டுகோளை அவர்க்குக் கூறுகிறோம்! இல்லையேல் "அவர் 'தமிழ்ப்பற்று' வெறும் வேடம்" என்று, "போலித் தமிழன்பர் அவர்; பசுத்தோல் போர்த்த புலி

யன்றோ அவினாசியார்'' என்றும் நாளை வரும் தமிழ்க்குலம் அவ லைச் சுட்டி நகைக்கும்! வீணான பழிக்கு அவர் ஆளாக வேண் டியதில்லையென்று கூற விரும்புகிறோம்!

தமிழர் திரண்டுவிட்டனர்; சென்னையிலே பாசறை அமைக்கப் படுகிறது: பிரிந்து நின்றவர்கள், விலகிப்போனவர்கள், எட்டி நின்றவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள் ஒன்று சேருகிறார்கள்! இந்தியை விழ்த்த ஒன்று கூடுகிறார்கள்! இந்தி எதிர்ப்புப் போர் இனி எந்நேரத்திலும் தொடங்கலாம்! தமிழ்ப் புலவர்கள், மாண வர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள்! உணர்ச்சி விறிட்டெழுந் திருக்கிறது! தமிழகம் தாக்குண்ட வேங்கையெனக் காட்சி தரு கிறது! போர் முரசு கேட்கிறது!

அமைச்சர் அவர்களை எச்சரிக்கிறோம் வருமுன்னர்த் தடுப்பது நலமென்று! டில்லி சென்றுவந்த அவினாசியார் காதில் நம் ஆலோசனை ஏறாதிருக்கலாம்; ஆனால் இந்தியை எதிர்க்கும் போர் வீரர்கள் தாம் கொண்ட உறுதியில் முன்னேறு வரென்பது மட்டும் எனவோ உறுதி! வாழ்க தமிழ் மொழி விழ்க கட்டாய இந்தி!





காலமும் கருத்தும்

புதுமைப் பித்தன்

தமிழ்ச் சிறுகதை மன்னராக விளங்கிவந்த நண்பர் 'புதுமைப் பித்தன்' இயற்கை எய்தினார் என்ற செய்தி தமிழருக்குப் பெருந் துயரத்தை அளித்தது. 'வெறும் அத்தைப் பாட்டி'க் கதைகளையே எழுதி எழுதித் தமிழ் இலக்கியத்தை மறுமலர்ச்சி யென்ற பெயரால் குட்டிச் சுவராக்கி வருகின்றவர்களே நிறைந்திருக்கும் இந்நாளில் 'புதுமைப் பித்தன்' போன்ற ஒன்றிரண்டு சிந்தனையாளர்கள் இருந்து தமிழுக்கு மறையாத பேரிலக்கியங்களைச் செய்துவந்தது தமிழர்கட்குச் சிறிது ஆறுதலாயிருந்தது. அப்பணியை அவர் தொடர்ந்து செய்யாது இளமையிலே மறையநேர்ந்தது தமிழ் மொழிக்குப் பேரிழப்பாகுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்னாரின் துணைவியாருக்கும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் நம் ஆறுதலைக் கூற விரும்புகிறோம். தக்கதொரு நினைவுச் சின்னம் அவருக்கு ஏற்படுத்தும் முயற்சி தொடங்குமென்று தெரிகிறது; 'அவர் எழுதிய கதைகளே அவருக்குப் போதுமான நினைவுச் சின்னம்' என்று தட்டிக் கழித்துவிட முயலாமல், உண்மையிலேயே, அவர்தம் பணிக்கு அழியாத உருவம் தரத் தமி ழர்கள் எண்ணிச் செயலாற்ற வேண்டும்.

நீதி கேட்கிறோம்

ஆசிரியர் வேலாயுதம் கொலை வழக்குச் சூதான முறையில் திரும்பப் பெறப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே! தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக அந்த மாவட்ட மக்கள், அரசினரின் நேர்மையற்ற போக்கைக்கண்டு கொதிப்படைந்திருக்கிறார்கள்! தமிழ்ப் பத்திரிகைகளும் இவ்வழக்கை மீண்டும் நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்று கோருகின்றன. அரசினரும் இவ்வழக்கில் கவனம் காட்டுவதாகவே தெரிகிறது! வழக்கை வாபஸ் வாங்கிய அதிகாரி அந்த மாவட்டத்தை விட்டு மாற்றப் பட்டுள்ளார்; மேலும் அந்நடவடிக்கைகள் அரசினர் பரிசீலனையி லிருக்கின்றனவாம்; தாமதியாது வழக்கைப் பதிவு செய்து, நடவடிக்கைகளைத் தொடரும்படி செய்வது அரசினரின் கடமையாகும். இல்லையேல் 'காட்டு ராஜ்யம்' நிலவ வழிகாட்டிய குற்றம் ஓமாந்தூர் மந்திரி சபையைச் சாரும் என்று கூற விரும்புகிறோம்.

பாலஸ்தீன் போர்க்களம்

வல்லரசுகள் ஆடுகின்ற விளையாட்டுக்கு அளவே இல்லை! பாலஸ்தீனத்தைப் போர்க்களமாக்கியவர்கள் உலகப் பெரும் வல்லரசுகளே! அவர்கள்தாம் யூதர்களை அங்கே குடியேற்றினர்; அரேபியர்கள் எவ்வளவு எதிர்த்தும் விடாது குடியேற்றினர். அதோடு இஸ்ரேல் நாட்டினை ஒப்புக்கொள்ளவுஞ் செய்தார்

கள். இக்காரியங்களே போருக்குக் காரணமாயின. அப்படியிருக்கும்போது, அவர்களின் கைப் பாவையாக விளங்கும் ஐ. நா. சபை பாலஸ்தீனில் போர் மூளாமல் தவிர்க்கமுடியாமற் போனதில் வியப்பொன்றுமில்லை. சண்டையை மூட்டிவிடுகிறார்கள்; பிறகு தீர்க்க முடியாமல் திணறுகிறார்கள்! இது அவர்களுக்கு ஒரு பொழுது போக்கு! ஆனால் பாலஸ்தீனம் போர்க்களமாகக் காட்சியளிப்பது அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் விளையாட்டல்லவே! இதனை இருசாராரும் உணர்ந்து அமைதியை ஏற்படுத்துவதே முறையாகும்.

தேர்தல் வேண்டாம்

நம்மை ஆளுகின்றவர்கள் இருக்கிறார்களே, நல்ல மனிதர்கள்! வீணான தொந்தரவுகளையெல்லாம் ஒழித்துவிடுகிறார்கள்! "தேர்தலா, வேண்டவே வேண்டாம்" என்று அவர்கள் கூறும்போது, அதற்காக மசோதாக்கொண்டுவரும் போது, வீணான போட்டிகளையும், பணச் செலவுகளையும், வாக்குறுதி தருவதையும், மக்கள் "யாருக்கு ஓட்போடுவது" என்று திண்டாடுவதையும் ஒரேயடியாய் ஒழித்துக்கட்டிவிடும்போது, அதாவது ஒத்திப் போடும்போது நாம் அவர்களை 'நல்லவர்கள்' என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது! மாவட்ட ஆட்சி மன்றங்கட்குத் தேர்தல்நடக்க வேண்டும் இப்போது; அது பிடிக்கவில்லை ஆட்சியினருக்கு; ஏதோ சாக்குக்கூறி, சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டே ஆட்சி மன்றங்களை நீடிப்பதற்கு மசோதா கொண்டுவந்



நிதியமைச்சர் ஆர்.கே.சண்முகம் அவர்கள் அண்மையில் சீமைக்குச்சென்றிருந்த போது லண்டன் தமிழ்ச் சங்கத்தார் அவரை வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

இருக்கிறார்கள். இவர்கள் போக்கைப் பார்க்கும்போது, "இனித் தேர்தலே வேண்டாம்; ராஜா என்று இருந்தால் அவர் 'இயற்கை எய்திய பிறகுதான் இன்னொருவர் பட்டத்துக்கு வரவேண்டும்; அதைப்போல, இப்போது இருப்பவர்கள் அவரவர் ஆயுள்காலம் பதவியிலிருப்பார்கள" என்று ஒரு மசோதாக் கொண்டுவந்தாலும் வருவார்களென்றுதோன்றுகிறது.

கண் திறக்குமா?

இத் தொடர்கதையை எழுதி வருகின்ற அன்பர் நக்கீரன் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்; அதனால்தான் சென்ற இதழிலும் இந்த இதழிலும் கதை தொடரவில்லை; அன்பர்கள் இந்நிலைக்கு மன்னிப்பதோடு, அடுத்த இதழிலிருந்து கதையைத் தொடர்ந்து படித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

எழுதியனுப்புங்கள்

தமிழ்நாட்டுப் பெருமக்கள், புலவர்கள், தாய்மார்கள், மாணவர்கள், இளைஞர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்ட கட்டாய இந்தியைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதை அரசினருக்கு எடுத்துக் காட்டவேண்டிய பொறுப்பையுணர்ந்து கருத்துரைகளை "இந்தி வந்தது, இந்தி" என்ற தலைப்பின்கீழ் இந்த இதழில் தொடங்கி, வெளியிட்டு வருகிறோம். அங்கங்கேயுள்ள அன்பர்கள் தங்கள் கருத்துரைகளையும், கழகங்கள், பொதுநிலையங்களின் கருத்துரைகளையும் திரட்டியனுப்பப் பெரிதும் வேண்டுகிறோம். ●

அட்டைப் படம்



பூங்கோதையும் பொன்முடியும் சந்தித்தார்கள்; இன்ப வாரிதியில் திளைத்தார்கள்; ஆனால் தண்ணீர் எடுத்துவரும் பெண்களின் பேச்சு நெருங்கநெருங்க அவர்கள் உள்ளம் துயர்க் கடலாகிறது; பிரிய எண்ணுவரோ அன்பால்பிணைக்கப்பட்டார்!

"நீர்மொண்டு செல்லுபவர்
நெருங்குகின்றார்
நினைப்பாக நாளைவா"
என்று சொன்னான்
காரிகையாள் போகலுற்றாள்
குடத்தைத் தூக்கி!
காலடியொன்று எடுத்துவைப்பாள்
திரும்பிப் பார்ப்பாள்!
ஓரவிழி சிவப்படைய
அன்னோன் பெண்ணின்
ஒய்யார நடையினிலே
சொக்கி நிற்பான்!

இக் காட்சியைச் சித்திரமாக்கியுள்ளார் நம் ஓவியர் கண்ணன்.

செந்தமிழ்த் தாய்க்குயிரீந்த சிறப்படைவாய்

இளங்குருதி கொப்பளிக்கும் தமிழ்ச்சிங்கக்
கூட்டமே! இங்கு வாராய்!
வளங்கொழிக்கும் தமிழ்நாட்டில், உயிரான
தாய்நாட்டில், வடவர் வாயால்
களங்கமுற்ற இந்தியெனும் புன்மொழியைக்
கட்டாயம் திணிப்ப தென்ற
உளங்கொண்ட அரசியலை ஒழித்துவிடத்
துடித்திருப்பாய்! ஒன்று கேள்நீ,

மறைமலையார், பாரதியார், நம்மருமைத்
திரு வி. க. மற்றும் கல்விக்
கரைகண்ட தமிழ்ப்புலவர் அனைவருமே
கூடிவிட்டார்! கண்டிப் பாக
முறையற்ற. திட்டமிதை எதிர்ப்பார் - தாய்
மொழியைக் காக்கப்
பறையறைந்து போர்தொடுப்பார் பைந்தமிழின்
கிழவர்களோ பார்த்தி ருப்பார்!

செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த செல்வம்நீ
உன்னினத்தைச் சேர்த்தொ ழிக்கும்
இந்திதனைத் தமிழ்ப்புலவர் எதிர்க்குங்கால்
தோள்கொடுப்பாய்! இறப்பு வந்தால்
செந்தமிழ்த்தாய்க் குயிரீந்த சிறப்படைவாய்!
இத்தருணம் செல்லு மாயின்
வந்துபுகழ் உனைத்தழுவும் காலமொன்று
வருவதினி ஐயந் தானே!

— நாரா நாச்சியப்பன்

தாசியாய்ப் போய்ப் பறக்கும் சூழ்ச்சி!

தேனருந்தி வான்பறக்கும் தேனீ தனைப்பார்த்து
'வானமுதம் வார்ப்பேன்வா' என்றழைத்தால் வந்திடுமோ?
நீரை இகழ்ந்தும் நிலத்தைப் புகழ்ந்துரைத்தும்
சேரென்றால் மீனினமும் சேர்வதுண்டோ இந்நிலத்தை?
கன்னல் கசக்கும்; களிப்பூட்டும் வேம்பென்று
தின்னத்தந் தால்அதனைச் சீஎன் றுமிழாரோ?
முல்லைக்காட் டைவெறுத்து மோனச் சுடுகாட்டை
நல்லதென்றால் நாசி சுளித்து, நகையாரோ?
காதலனைத் தள்ளிமற்றோர் காளை தனைமணக்க
ஓதினால் மங்கை உளம்உவகை கொள்வதுண்டோ?
பைந்தமிழை, எங்கள் பழந்தமிழைத் தள்ளிவிட்டும்
இந்தஅமிழ் தம்வேண்டாம் என்றுரைத்தும், நேற்றுவந்த
இந்திதனைத் தந்தால் இறும்பூது கொள்வதுண்டோ?
சொந்தமொழி இன்றிச் சுகவாழ்வைக் கண்டதுண்டோ?
தென்றலின்றித் தாமரைப்பூ வாசம் தெரிவதுண்டோ?
குன்றின்றிக் கொள்வதுண்டோ, கேட்கும் எதிரொலியும்?
கேழ்வரகில் நெய்வடியும் என்றுரைத்தால் கேட்பார்க்குப்
பாழாகப் போனதுவோ புத்தி பரிந்தேற்க!
இந்திமொழி யால் இன்பம் எங்கும் பிறக்குமென்றால்
அந்தமொழி தனனை அவரசமாய் ஏற்பதற்கு!!
விந்தைத் தமிழ்மொழியை விட்டு விடுதற்கு!!!
செந்தமிழர் மூளையதும் செல்லரித்துப் போயிற்றோ?
தன்மொழிக்காய் மக்களினம் சண்டை தொடுத்ததெனில்
பின்வாங்கி னார் என்ற பேச்சும் வழக்கிலுண்டோ?
வங்கச் சிறார் இன்று வன்மையாய் இக்கருத்தை
தங்கச்செய் தார்கள் தாரணி வியப்பெய்த!!
எந்தமிழின் தொன்மை, இளந்தென்றல் இந்நிலத்தில்
வந்த அந்த நாளே!; வரை உண்டோ கூறுதற்கே?
எந்தமிழின் இன்பம், இனிக்கின்ற பாலோடு
செந்தேன் குழைத்து தெவிட்டற்ற அவ்வின்பம்!
எந்தமிழின் கன்னி இளமையோ, எண்ணிடவும்
சிந்தையின் விந்தைத்தேன் தேக்கும் இளங்குமரி!
இந்தத் தமிழ்மொழியை ஏற்றுச் சுவைக்கின்ற
சொந்தச் சிறார்மனத்தைச் சூததனால் குத்திவிட்டால்
தாசியாய்ப் போய்ப்பறக்கும் சூழ்ச்சிசெயும் ஆட்சிஎல்லாம்
வீசுகின்ற ஓர்மூச்சில் வீண்!

— த. அ. சுந்தரராசன்

செந்தமிழ்க்கிது தீமையு மன்றோ?

ஆரி யக்கலப் பால்தமிழ் மேன்மை
அல்ல லுற்றது போகமற் றின்னும்
ஓரி யற்கை வளங்கெடும் 'இந்தி'
ஒல்லை யிற்றமிழ் நாடுபு குத்தல்
நேர வெண்ணிச் செயுஞ்செய லாமோ?
செந்த மிழ்க்கிது தீமையு மன்றோ!
பாரை யாளுதல் மக்களி னுள்ளப்
பக்கு வந்தெரிந் தாளுத லன்றோ?

ஆயி ரக்கணக் கானவர் முன்னாள்
அரிய நம்மொழி காத்திடல் வேண்டி
நேய தாஞ்சிறை சென்றும்நல் லாவி
சிந்தி யுஞ்செய லாற்றியவ் விந்தி
ஆய தோர்மொழி ஒட்டிய செய்தி
ஆட்சியாள ரறிந்தது மன்றோ
தீய விச்செயல் செய்வது மென்னோ
சீர்த்தி யோபுகழ் சேர்வது மாமோ?

செம்மொ ழித்தமி ழேமுத லாகச்
சீர்த்தி மேவிட ஆங்கிலம் என்னும்
அம்மொ ழிக்கிரண் டாமிடம் தந்தால்
அமைவு டைத்தென லாகுமிந் நாட்டில்.
எம்மு டக்கினும் ஆங்கிலம் ஒன்றால்
எய்தி மாந்தர் கலந்திட லாகும்
செம்மை யில்வட விந்தியைக் கற்றுச்
செவ்வி கெட்டுச் சிதைவது மாமோ?

மற்றும் இந்தியைப் பள்ளிக ளெங்கு
மாற்றொ ணாத நிலையிற் புகுத்தி
வற்பு றுத்திச் சிறார்தமக் கின்ப
மல்கு கல்வியை வேம்பென வாக்கும்
பெற்றி ஒய்ந்து விருப்புறு வோர்கள்
பெறுக இந்தியை என்று விடுத்தல்
உற்ற வாட்சியிற் பெற்றில மாயின்
உறுவ துண்மை உயர்மொழிப் போரே!

— சி. து. கன்னிசாமி

போர்தொடுக்க வருவீர் நீர்!

தனித்தமிழ் ஆட்சிசெயத் தக்கதிருக்
குறளோடு தவறிலாத
பனித்தசுவை பிலிற்றிஉளம் பருக,பெருங்
காப்பியநற் பாக்க ளோடு
நுனித்தறியும் இலக்கணத்தின் நுட்பமெலாம்
நுவலக்கலை நூல்கள் ஈட்டம்
இனித்ததமிழ் கொடுத்திருக்க இந்திமொழி
புகுத்தலிவண் ஈன மன்றோ!

வடமொழியின் அடிப்படையில் வந்ததினால்
பார்ப்பாரும் வளர்த்தல் இந்தி
கடமைதமக் கெனக்கொண்டார் கபடர்வட
நாட்டாரும் கருதும் ஆட்சி
மடமைசூழ் தென்னாட்டார் மேல்செய்ய
இந்திகொடு மடக்க நின்றார்.
இடமிதற்குக் கொடுக்கில்தமிழ் இன்னலுறும்
தமிழர்களும் ஏற்றங் காணார்.

ஒருதாய்க்குப் பிறந்ததமிழ் உரிமைபெறு
நாட்டோர்நீர் உண்மை யானால்
வருதீமை தனைப்போக்க வகையான
பணிகள்செய வன்மை யோடு
ஒருமனதாய் எல்லீரும் ஒன்றிமொழிப்
போர்தொடுக்க உவப்பி னோடு
வருவீர்நீர் களம்நோக்கி! வசைதீரும்!
இசைஏறும்! வளத்தைக் காண்பீர்!

— கரந்தைக் கவிஞர்

இந்தி வந்தது, இந்தி!

இங்கே கல்வியமைச்சருக்குத் தமிழ்ப் பெருமக்களின் கருத்துரைகள் திரட்டித் தரப்படுகின்றன- கட்டாய இந்தியைக் கண்டு தமிழ்ப் பொது மக்கள், குறிப்பாக மாணவர்கள் எவ்வளவு கொதிப்படைகிறார்கள்! வரப்போகும் இந்தி எதிர்ப்புப் போருக்கு முன்னறிவிப்பு இவ்வீர உரைகள் என மதிப்புக்குரிய நம் கல்விஅமைச்சரை எச்சரிக்கிறோம்.

திருச்சி,
5-7-48

எப்போ வருவாளோ இந்திப்பெண்!

இந்திப்பெண் எப்பொழுது தமிழகத்தே தன் காலை வைப்பாளோ என ஏங்கினான் தமிழன். கட்டாய இந்திமேலுள்ள காதலா? இல்லை. தேசியமெனும் போர்வையிலிருந்து பூச்சாண்டி பிடிக்கவா? இல்லை. பின் எதற்கு? இமயத்தே கொடி பொறித்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வழிவந்த தமிழனுக்கு— தலையாலங் கானத்துச் செரு வென்ற தமிழனுக்கு - சாளுக்கியரை வாளுக்கிரையாக்கிய தமிழனுக்கு— அசோகனையே அடியெடுத்து வைக்க அஞ்சும்படி செய்த தமிழனுக்கு—ஈழத்தே, கடாரத்தே, ரோமிலே கப்பலுங் கொடியும் கட்டியாண்ட தமிழனுக்கு - ஒரு வாய்ப்பு! வடவாரிய மன்னர்களை வாளுக்கிரையாக்கி, கனக விசயன் தலையிலே கல்லெடுப்பித்து, பத்தினி கண்ணகிக்குப் படிவமமைத்த குட்டுவன் வழிவந்த தமிழனுக்கு ஒரு வாய்ப்பு!! பண்பட்ட திராவிடம் புண்பட நேர்ந்ததே என ஏங்கிய தமிழனுக்கு ஒரு வாய்ப்பு!!! திராவிடத் தினசரிக்கு 2000 ஜாமீன்கேட்டபோது "2000 தலைகொடுக்கத் தயார்" எனச் சொன்ன தமிழனுக்கு ஒருவாய்ப்பு! இவ்வளவு பெருமைகொண்ட தமிழனுக்குப் போர்முரசு கொட்ட வழியில்லாதிருந்ததற்கு ஆரியம் அவினாசியார் மூலம் போருக்கழைத்து விட்டது. தமிழனின் தனியரசு மாளிகைக்குக் கொண்டு செல்லும் வாயிற்படியிலே காலை வைக்க வாய்ப்புஏற்படுவதால்தான் தமிழன் இந்திப் பெண்ணை எதிர்நோக்கி வரவேற்கிறான். தமிழனுக்குத் தோள் இருக்கிறது. தோளிலே வலிமை இருக்கிறது. எனவே வெற்றிமுரசும், விரசங்க நாதமும் நம்முடையதே!

தா. பெ. இராமசாமி

கண்டனூர்,
5-7-48

அவினாசியாருக்கு நன்றி!

கல்வி அமைச்சர் கனம் அவினாசிலிங்கம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். வாழ்விழந்த தமிழருக்கு வாழ் வழிக்க வழியமைத்த அவினாசியாருக்கு எனது நன்றி. "காமத்துப் பாலைக் கடிந்து கூறிய கல்வியமைச்சர் - தமிழ்ப் பயிரில் இந்தியெனும் எருமை ஓட்ட முயலும் கல்வியமைச்சர் - இப்படிப்பட்டவருக்கா நன்றி கூறுவது?" என்று திடுக்கிடுகிறீர்களா? ஆம். அவருக்கேதான் நன்றி கூறுகின்றேன்.

'தமிழர் ஒன்றுபட வழி தமிழ் மொழியே' என்று பலர் கூறக் கேட்டிருக்கின்றேன். ஆனால் மொழி மாத்திரம் நம்மை ஒன்று படச் செய்யமுடியாது. மொழிக்கு ஏதாவது பங்கம் அல்லது ஆபத்து ஏற்பட்டால்தான் தமிழர் ஒன்று பட முடியும். ஆபத்தைத்தடுக்க வும் முடியும். அவ்வாறு மொழிக்கு ஆபத்து ஏற்படச் செய்து தமிழர் ஒன்று சேர வழி காட்டிய அவி னசியாருக்கு நன்றிகூறத்தானே வேண்டும்?

அதோ பாருங்கள், உழைப்பின் உருவம் - உறுதியின் வைப்பு - பெரியாரின் தலைமையிலே படை திரளுகின்றது. போர்முரசு கேட் கிறது. புறப்படுவோம் வாருங்கள். புறப்படும்பொழுது தமிழரிடை விழிப்பை ஏற்படுத்திய அவினசி யாருக்கு நன்றிகூறிவிட்டுப் புறப் படுவோம்.

பழ. சுப. மணியன்

பச்சையப்பன் கல்லூரி
சென்னை,
6-7-48

சர்க்கார் கைவிடுவார்களாக!

இந்தியைக் கட்டாய பாடமாக் குவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்திக்கு இங்கே இடம் கொடுத்துவிட்டால் சிறப்புடைய நம் மொழி, கலை, பண்பு யாவும் சிதைவுறுவது திண் ணம். இந் நாட்டில் இன்பத் தமிழ் மொழியாகிய நம் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குவதே நாம் உடனடியாகச செய்யவேண் டிய பணியாகும். இந்த வேளை யில் இதை விடுத்து வேற்று மொழிக்கு ஆக்கம் தேடுவது ஒரு தற்கொலை முயற்சியாகும். தற் கொலை முயற்சி சட்ட விரோத மாகும். எனவே இத் தற்கொலை முயற்சியை நாம் சட்டப்படி தடை செய்தாகவேண்டுமன்றே? இந்தியைப் புகுத்துவதால் பல் வகை அறிவுத் துறைகளில் ஈடு பட்டுள்ளவர்களின் காலம் இந் தியை எதிர்ப்பதில் வீணாகி விடு கின்றது. காலத்தின் அருமையை எண்ணிக் கட்டாய இந்தித் திட் டத்தை உடனே சர்க்கார் கைவிடு வார்களாக!

கோ. திருஞானம்

திருச்சி,
9-7-48

மாணவ உலகின் கொதிப்பு!

வீழ்ந்த தமிழகத்தை விறு கொண்டெழச்செய்து தாலமுத்து, நடராசனைப் பலிகொண்டது ஆச் சாரியாரின் இந்தி நுழைப்பு. தமி ழர் ஏறு திரு. ச. சோ. பாரதி யாரின் வீர முழக்கம், தமிழ் மக் களின் நரம்புகளிலே முறுக்கை யும், இரத்தத்திலே கொதிப்பை யும் ஊட்டித் தன்மானத் தமிழர்க ளைத் தாய்மொழிக்குப் பணி செய்ய ஊக்கியது. பாரதியின் எதிரொ லியே மக்கள் மனத்தின் எதிரொ லியாகக் காட்சியளித்தது.

இன்று அவினசியாரின் ஆணவ அட்டகாசங்களுக்குப் பதில்கூறும் முறையில் பாரதியின் அறைகூவல் அமைந்தது கண்டு மாணவ உலகு இறுமாப்புக்கொண்டது. மாணவ மணிகளின் மனக்கொதிப்பு பாரதி யாரின் எதிரொலியாக இருக்கு மென்பதில் எத்துணை ஐயமு மில்லை.

மு. காளிமுத்து.

தூத்துக்குடி
9-7-48

குருதி கொதிக்கிறது!

மீண்டும் இந்தி வெள்ளாட்டி தமிழகத்தில் கட்டாய மாற்றாந் தாயாக ஆக்கப்படுவதையறிந்து மாணவர்களாகிய நாங்கள் எவ் வாறிருப்போம் என்பதைத் தாங்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

நான் ஐந்தாம்பார மாணவன் தான். எங்களுக்கு இந்தி பாட மாக இல்லை. எனினும் என் சகோ தர மாணவர்களாகிய கீழ்வகுப்பு

மாணவர்களின் நிலையை எண்ணுங்கால் என் சித்தம் சோர்வடைகிறது. குருதி கொதிக்கிறது. என்னருமைத் தமிழுக்கு வரும் இழுக்கைக் களைந்தெறிய என் உள்ளம் துடிக்கிறது. எனவே இந்தி எதிர்ப்புப் போரில் மாணவர்களாகிய எங்களுக்கு முதலிடம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

நம் தலைவர் ஆணையிட்டால் இப்பொழுதே நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற பல மாணவர்கள் பச்சை ரத்தம் பரிமாறி நந்தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கத் திரண்டுவரத் தயாராயிருக்கிறோம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

P. V. R. பாண்டியன்

சென்னிமலை,
7–7–48

தமிழனல்ல!

இந்தி வேண்டும் என்று கூறின் அவன் தமிழனாக இருக்கமுடியாது.

சாமிநாதன்

அழகனுபுரம்
8–7–48

திருவாங்கூர்த் தமிழகத்தில் இந்தி

தற்பொழுது சென்னை மாகாணத்தில் கட்டாய இந்தி, கட்டாயம் - இட்டபாடம் - கட்டாயம்... என்று அவினாசியாரின் பல அதட்டல்களின் மேல் நடைமுறையிற் புகுத்தப் பட்டிருக்கின்றது. ஆனால் இங்கு கல்வி மந்திரி திரு. டி. எம். வர்க்கீஸ் அவர்களால் மத்தியதர மாணவர்கள் மீதும் உயர்தர மாணவர்கள் மீதும் புகுத்தப்பட்டு விட்டது.

இங்கு இந்தி எதிர்ப்பைப்பற்றி அனைவரும் அறிந்திலர். ஏனெனில் தன்மதிப்பை உணராததிலேயிலிருக்கின்றனர் நாஞ்சில் தமிழர்கள். இந்த ஆரியச்சூழ்ச்சியைப் போர்முரசு கொட்டத்தக்க செய்தித் தாள்களும் இவணில்லை. ஆயினும் சில - திராவிடநாடு பிரிவினை நாள் போன்ற - கூட்டங்களில் எடுத்துரைக்கின்றனர். அதுவும் போதாது.

ஆகவே நம் திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் தூத்துக்குடியில் கூறினர்கள் — ''திருவாங்கூருக்குப் பிரசாரச் செயற்குழு அமைக்கவேண்டும்'' என்று. அவர் சொற்படிகேட்டுத் திராவிடம் பற்பல நன்மைகளடைந்திருப்பது கண்கூடு. அதேபோல் திருவாங்கூரிலும் திராவிடர் கழகச் செயற்குழு அமைப்பின் பல நன்மைகளையடையலாம். ஆகவே திருவாங்கூர்த் தமிழகத்தில் கூடிய சீக்கிரமாகச் செயற்குழு ஒன்றமைக்கத் தலைமைத் திராவிடர் கழகத்தை வேண்டுகிறேன்.

இரா ஆண்டி

இடைநிலைக் கல்லூரி
பெங்களூர்

இந்தி வேண்டாம்!

உயர்தனிச் செம்மொழியாகிய உயிரினும் இனிய தமிழ் உலவும் நாட்டிலே, மீண்டும் கட்டாய பாடமாக வளம் சிறிதுமற்ற வடநாட்டு வரட்டு இந்தி நுழைந்திருக்கிறது. கட்டாய இந்தியால் கன்னித்தமிழ் மொழி நலியும், திராவிடப்பண்பு அழிவுறும், வஞ்சக ஆரியம் உரம் பெறும், வடநாட்டாதிக்கம் வேரூன்றும், திராவிடர்கள் என்றென்றும் வடவருக்கு அடிமைகளாகவே இருக்க நேரும். இதைத் திராவிட மக்கள் அனைவரும் உணர்ந்து ஒன்று சேர்ந்து 'இந்தி எங்களுக்கு வேண்டாம்' என்று முழங்க வேண்டும், எத்தகு இன்னல்கள் எழுந்தாலும் ஏற்று இந்தியை ஒழிக்க முனைய வேண்டும். வீழ்க இந்தி! வாழ்க நம் தமிழ்!

இர. சேவியர்

வேகுப்பட்டி
8–7–48

போருக்கு அழைத்துவிட்டார்!

"தமிழகத்திற்கு 'இந்தி' தேவை தானா?" என்று ஒவ்வொரு தமிழனும் தன் உள்ளத்தைக் கேட்கும் காலமிது. என்னைப் பொறுத்த வரையில், 'இந்தி' அறவே கூடாது என்றுதான் கூறுவேன். உயர்திரு ம. பொ. சி. அவர்களும், "தமிழகத்திற்கு இந்தி வேண்டுமா? வேண்டியதில்லை என்பதே எனது பதில்" என்று தமிழ் முரசில் அறிவித்திருக்கின்றார். இதுபோலவே, தமிழ்ப் பேரறிஞர்களான, மறைத்திரு. மறைமலையடிகளாரும், நாவலர் பாரதியாரவர்களும் அறிவித்திருக்கின்றார்கள்.

ஒருசில கூட்டத்தார்களும் செய்தித் தாள்களும் வேண்டுமென்று கதறுகின்றன. அவர்களைத் தவிரத் தமிழகமெங்கணும் எதிர்ப்பொலி ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. 'தமிழ்மணி'போன்ற தேசியக் கிழமை யிதழ்களும் தீவிரமாக எதிர்த்தெழுகின்றன.

கல்வியமைச்சர் இடத்துக்குத் தகுந்தாற்போல் பேசியும் திட்டம் வகுத்தும் நற்பெயர் பெற முயற்சித்தார். இறுதியில் சிறு கூட்டத்தாரின் கதறலைக் கேட்டு, "தமிழ் நாட்டிலும் 'இந்தி' கட்டாயந்தான். அதை படித்தால்தான் அரசினர் அலுவல் உண்டு" என்று சிறிதும் நாயமின்றிக் கூறிவிட்டார். தமிழ் மக்களை மொழிப்போருக்கு அழைத்துவிட்டார்.

ஆ. பழ. குமரப்பன்

நாமக்கல்
8–7–48

ஒன்று, இந்தி ஒழியவேண்டும்

இந்தியைக் கட்டாயப்படுத்திப் படிக்கச்செய்வது தமிழ்க்கல்விக்கு இசைந்ததாக இல்லாததோடு, தற்காலம் நம் தமிழ் இருக்கும் நிலையில், அதற்கும் அதன் கலைவளர்ச்சிக்கும் பெரிதும் தடையை உண்டு பண்ணும் என்பதை அறிவுக்கண் கொண்டு பார்க்கும் எவரும் மறுக்க முடியாது. என்போன்ற தமிழ் மாணவர்களுக்கு இளம் வயதிலேயே சிறு வகுப்பில் இந்தியைக் கட்டாய பாடமாக்கித் தமிழ் இளைஞர்களின் முற்போக்கைத் தடுத்து, இன உணர்ச்சியையும், தன்மானத் தன்மையையும் தகர்த்து விடலாம் என ஆரியம் மனப்பால் குடிக்கிறது. அதன் விளைவு என்ன ஆகும் என்பதை இன்னுஞ் சிறிது காலத்திலறிந்து கொள்ளலாம். உண்மையிலேயே இந்நாமக்கல் பள்ளியில் இந்தியைப் படிப்பதென்பதை மாணவர்கள் வெறுத்து வருகிறார்கள் என்பதற்கு அறிகுறிகள் தோன்றுகின்றன. மாணவர்களே! வரப்போகும் இந்தி எதிர்ப்புப் போரிலே உங்கள் முழுச் சக்தியையும் காட்டுங்கள். ஒன்று இந்தி ஒழியவேண்டும், இல்லையேல் தமிழொழியவேண்டும் என்று சங்கற்பம் செய்துகொள்ளுங்கள்.

செல்லப்பன்

பிரைவேட் பாடசாலை
அரவக்குறிச்சி, 6–7–48

உறுதி!

மொழிப்போரில் முன்னணியில் மாணவர்களும், எங்கள் ஆசிரியர்களும் எஃகு மனமுடன் இறுதி வரை போரிட உறுதி கூறுகிறோம். வெற்றியின்றேல் வீர மரணம்.

ஏ. எம். அப்ரகாம்

கரூர்,
7–7–48

தமிழகம் தாங்க முடியாது!

மீண்டும் இந்தி கட்டாயமாகத் தமிழ் நாட்டில் திணிக்கப்படுவது கண்டு நாம் அரசியலாரைப் பலமாக எச்சரிக்கிறோம். அன்று போர்க்களத்தில் தோற்று ஓடிய ஆச்சாரியாரைக் காட்டி – அந்நாள் தமிழகம் சீறிப் போரிட்டதே வேல்பட்ட வேங்கையென அந்தப் "புறநானூற்றை"க் காட்டி — இறந்த தாளமுத்து நடராசர்களைக் காட்டி எச்சரிக்கின்றோம், தமிழகம் இதனைத் தாங்காது – நிச்சயம் தாங்கமுடியாது என்று.

த. ஜான்சன்

பொன்னகரம்

புதுமைப்பித்தன்

புதுமைப் பித்தன் மறைந்தார்; அவருடைய கதைகள் அவர்தம் புகழை என்றும் நிலைநிறுத்தும் தன்மையன! "பொன்னகரம்" எத்தனை தடவை — படித்தாலும் புதிதாகவே இனிக்கிறது! —

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப்போல் அங்கு ஒன்றும் இல்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்கிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அது தான் அங்கு 'மெயின் ரஸ்தா,' கைகோத்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம், -எதிரே வண்டிகள் வராவிட்டால். இதற்குக் கிளையாக உள்வளைவுகள் உண்டு, முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்கவேண்டுமானால், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால் தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' - அல்ல, யமுனை தானே கறுப்பாக இருக்கும்? - அது தான். பிறகு ஓர் இரும்புவேலி, அதற்குச் சற்று உயரத்தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் — கூடுகள் — ஆமாம், வசிப்பதற்குத் தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை-சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

காதற்கதைகள், சீர்திருத்தக் கதைகள் இவற்றுக்கெல்லா மிடையே வேறொரு குரல் கேட்கிறது. அது என்ன என்று திரும்பிப் பார்த்தால் மேஜை மீது **'புதுமைப் பித்தன்'** சிறுகதைப் புத்தகம் விரிந்து கிடக்கிறது. சிறுகதை மர்மங்களை கண்டறிந்துள்ள 'புதுமைப் பித்த'னின் கதைகளுக் கிடையே திரியும் பொழுது ஒரு கவியுலகிலே திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது. இவருடைய கதை ஒவ்வொன்றும் ஒரு தனி அனுபவ முத்திரை பெற்றிருக்கிறது. ஒவ்வொன்றிலும் உண்மையின் நாதம் தொனிக்கிறது. இவருடைய சில கதைகளை ரஸம் ததும்புகிற பாடல்கள் என்றே சொல்லி விடலாம்.

—ரா. ஸ்ரீ. தேசிகன் M.A.,

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீனபிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் நீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம், அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டுவரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? "போனல்" பெற்றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன 'ஸொக்ஸோ' 'மெல்லின்ஸ்பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போகமுடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட்மார்னி சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம அவர்களுக்கு. அதுதான், அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கல கலவென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதிருந்துதான் அவ்வூர்ப பெண்கள தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்கவரும பெண்கள்! அங்கு தண்ணீர் எடுபபது என்ருல் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள், - விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால் பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள் தாம என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்து தானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழவேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன, புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும அவனைக் கொன்றன. அவனும் அவைகளைக் கொன்

ளுன், அதற்காக வலிமையற்று வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தாபோனுன்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு - வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி அதைப் பற்றி அங்கு அதிகக் கவலையில்லை. அது வேறு உலகம ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்குமேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிருன், சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தமபி, முருகேசன் குதிரை—ஆக ஐந்து நபர் சேர்ந்து அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில் தான், இவர்கள் சாப்பாடு —(குதிரை உள்பட) விட்டுவாடகை, போலீஸ் 'மாமூல்,' முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு, - எல்லாம் இதற்குள் தான். எல்லோரும் ஏகதேசக்குடியர்கள் தான். 'டல் ஸீஸனில்' பசியை மறக்க வேறுவழி? பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப்பறந்து போம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து, வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும், அவன் குதிரையும் 'தண்ணி போட்டு' விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஊர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டு வந்து போடும் பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினுள் அம்மாளு. அப்பொழுது தான் சற்றுப் பேசினுன். அவனுக்குப் பால் கஞ்சிவேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலி போட இன்னும் இரண்டுநாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணிர் எடுக்க வருகிருள்.

'கும்' மிருட்டு, பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும். ஆனுல் அது மேகத்தில் மறைந்து கொண்டால், முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும் போல் இரைச்சல் தான். ஒருவாறு தண்ணிர் பிடித்தாய் விட்டது. திரும்பி வருகிருள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன், —அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிருர்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே? இது தான், ஐயா, பொன்னகரம்!

[இக்கதைஅவபுகப் பிரசரமான "புதுமைப் பித்தன் கதைகள்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது]



சிறுவர் அரங்கம்

காதில் பிறந்த கதை

- அத்தான் -

சொக்கன் பரிட்சையில் தவறி விட்டான். அவன் மீண்டும் அதே வகுப்பில் சென்று உட்கார விரும்பவில்லை. ஆனால் அப்பா அம்மாவின் அதட்டலுக்குப் பயந்து பள்ளிக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அந்த ஆண்டு எல்லாவகுப்புகளுக்கும் புத்தகங்களை மாற்றி விட்டார்கள். அதனால் புதுப்புத்தகங்கள் வாங்கும் மகிழ்ச்சியில் சொக்கன் ஒருவாறு கவலையை மறந்திருந்தான்.

புதிதாக வாங்கிய தமிழ்ப் புத்தகத்தை ஒரே மூச்சில் படித்துப் பார்த்தான். அதில் மகாபாரதக் கதையிலிருந்தும் சிலபகுதிகள் எடுத்துப் போட்டிருந்தார்கள்; அதைப் படித்த அந்தக்குழந்தையுள்ளத்திலே பல சந்தேகங்கள் இடம் பெறலாயின.

குந்தியம்மாள் தான்பெற்ற மந்திரங்களின் சக்தியினாலே கல்யாண மாவதற்கு முன்னால் ஒரு குழந்தையைப் பெற்றாள் என்பது ஆச்சரியமாக இருந்தது! அதுவும் அந்தக்குழந்தை காதிலிருந்து பிறந்ததென்ற செய்தி அவன் ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது! அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஒருநாள் ஆசிரியர் அதே பாடத்தை வகுப்பில் நடத்திக் கொண்டிருந்தார்; "சார்! காதிலிருந்து குழந்தை எப்படி சார் பிறக்கும்?" என்று சொக்கன் கேட்டான். "சீ முட்டாளே; உட்காருடா. இரண்டாவதுவருஷம் தானே மடையன். பெரிய கெட்டிக்காரன் யாதிரி கேள்வி கேட்பதாக எண்ணம். கர்னன் என்ற பெயரே அதைக்காட்டவில்லையாடா? கர்னம் என்றாலே



காது என்று அர்த்தம்; இனி

மேல் வகுப்பில் பாடம் நடக்கும் பொழுது இதுபோன்ற அசட்டுக் கேள்விகளைக் கேட்கக் கூடாது" என்று ஆசிரியர் புத்தி கற்பித்தார். ஆசிரியர் அதட்டலைக் கேட்டுச் சொக்கன் பயப்பட்டான். ஆனால் அவன் உள்ளம்மட்டும் அதனைப் பொருட்படுத்தாது யோசித்துக்கொண்டே இருந்தது.

சில நாட்கள் சென்றன. சொக்கனுடைய வகுப்புக்கு ஒரு புதுப்பையன் வந்து சேர்ந்தான். பையன்களெல்லாம் சேர்ந்துகொண்டு அவனை விசாரித்தார்கள். பெயரென்னவென்று கேட்டார்கள். அவன் 'மூக்கன்'என்று பதில் சொன்னான்.



சொக்கனுடைய சின்ன உள்ளம் எதையோ யோசித்துக்கொண்டிருந்தது. "காதிலிருந்து வந்தவன் கர்ணனாயிருந்தால் மூக்கிலிருந்து வந்தவன்தானே மூக்கன்?" மெதுவாக வகுப்பு முழுவதும் இந்தச் செய்தி பரவியது. பையன்களெல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். மூக்கன் அழுதுகொண்டே ஆசிரியரிடம்சென்றான்.

பையன்களெல்லோரும் சொக்கனைச் சுட்டிக் காட்டினார்கள் ஆசிரியர் சொக்கனைப் பெஞ்சியின் மேல் ஏறச்சொன்னார். 'காலிப் பயல், வகுப்பைக் கெடுக்கிறான்' என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளிவந்தன. ஆனால் சொக்கன் தன் ஆராய்ச்சியை மட்டும் நிறுத்தவே இல்லை.

பொய் சொல்வது பாவம் என்று எல்லா நீதி நூல்களும் முழக்குகின்றன. புராணங்களோ பொய்க் களஞ்சியங்களாகத் திகழுகின்றன. புராணம் எழுதினவனும், படிப்பவனும் பெரும் பாவிகள்என்று தானே கூறவேண்டும்.



வள்ளுவர் விருந்து

5. மயங்கும் நெஞ்சு!

‘கலிங்கன்’

தோழிகள் சூழப் பொழில் விளையாட்டிற்குச் சென்றாள். எத்தனையோ இனிய விளையாட்டுக்கள்! ஆடிப்பாடி அகங்களித்தனர். சோலை நடுவே மயில்கள் கூடி நடனமிடுவது போன்றிருந்தது மங்கையர்கள் விளையாடி மகிழ்ச்சிப் பெருக்கால் களித்துக் குதித்தாடும் தோற்றம்.

“பூப்பறித்துக்கொண்டு வீட்டுக்குப் போவோமே” என்று குயிலும் வெட்கக் கூறுகின்றாள் ஒரு கோதை. “ஒவ்வொருவரும் தனித்தனியே போய்ப் பூப் பறிக்க வேண்டும், யார் அதிகம் பறிக்கின்றார்களோ பார்க்கலாமா?” என்று வீம்பு கூறுகின்றாள் ஓர் இன்குரலாள்.

‘சரி’ என்று ஏககாலத்தில் அனைவரும் கூறினர்.

ஒரு விநாடியில் இளமான்கள் போலத் துள்ளி ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசை நோக்கிச் சென்றனர்.

அவளும் சென்றாள். இனிய மலர்ப் பொழிலின் இடையே அழகழகாகப் பூத்துத் தொங்கும் மலர்கள், சரம் சரமாகப் பூத்துப் பொன்னொளி வீசும் கொன்றை. கண்டார் மயங்கக் கவின் நிறைந்து விளங்குங் காந்தள். வேட்கையூட்டி மயக்கந் தரும் வேங்கை. “பார் உன் முறுவலினும் அழகு நான் தான்” என்று கேலி பேசுவது போன்று முறுவலித்துத் தோன்றும் முல்லை. மேலும் பல கொடிப்பூக்களும் கோட்டுப் பூக்களும் நிறை நிறையாகப் பூத்து நறுமணத்தைத் தென்றலுடன் கலந்து அள்ளி வீசுகின்றன.

குழலாட, மெல்லிய ஆடை இளங்காற்றில் அசைந்தாட, எழிலுடன் இளமையும் கூடிக் களி நடம்புரிய மலர் பறிக்கின்றாள். ஒவ்வொரு மலராகச் சென்று கொய்து சேர்க்கின்றாள். ஒரு முல்லை மலரைக் கொடியை வளைத்துப் பறிக்கின்றாள். அந்த மெல்லிய விரல்களிடையே காந்தள் முல்லையை முத்தமிட்டு ஆசையுடன் அணைத்துக்கொள்வது போன்ற தோற்றம். சிறு செண்பகம் ஒன்றை முகர்ந்து பார்க்கின்றாள். தமிழும் செண்பகமும் கொஞ்சிக் குலவுகின்றன. மாலை ஒன்றைக்

கழுத்தில் அணிந்தாள். தலையிலும் பூக்களைச் சூடினாள். அழகிய பூங்கொடியில் இத்தனை வேறு வேறு மலர்கள் எவ்வாறு பூத்தன! பூக்களின் சுமை தாங்காது துவளும் இடையுடன் மயிலினும் மிக்க ஒயிலுடன ஒவ்வொரு மலராகப் பறிக்கின்றாள அவள.

அவனும்தோழர்கள பலருடன் சென்றான் காடு நோக்கி. கட்டழகு மிக்க இளங்காளை. நாளும சென்று சோலைகளினூடே மான்களையும், காளிடையே வேங்கை, யானை முதலியவற்றையும வேட்டையாடுவதில் அவனுக்குத் தனி இன்பம். உலகத்தில் சிறந்த இன்பம் என்று அவன எண்ணியது 'வேட்டை' ஒன்றைத்தான். வேறு எதிலும் அவன் உள்ளம அவ்வளவு இன்பத்தைக் காணவில்லை. அவன் கண்டானா அன்றுடன் அவன் முடிவு வேறு திசை நோக்கித்திரும்பும்என்று?

தோழர்களுடன் கூறினைத்துத் 'தனியே சென்று நான வேட்டையாடுவேன்! உங்களை வெல்வேன்' என்று உறுதி கூறிப் பிரிந்தான்.

பகல் முழுதும் காடெல்லாம் அலைந்து திரிந்தான். ஒரு கொடிய வேங்கையொன்று அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது. வேங்கையுடன் போராடி வென்று வீழ்த்தினான். வில்லின நாண்கயிற்றால் அதைப் பிணித்து இழுத்துக் கொண்டே வருகின்றான்.

கொஞ்சங் களைப்புத் தோன்றியது. வேங்கை மரத்தின் தண்ணிழலும், குளிர்ந்த தென்றலும், அம்மரத்தடியே இயற்கையாய் அமைந்து கிடந்த மேடை போன்ற கருங்கற் பாறையும் அவனைக் கூவி அழைத்தன. இயற்கையின் ஆணைக்கு அடங்கி அக்கல்லில் உட்கார்ந்து கொண்டு தன்னால் கொல்லப்பட்ட வேங்கையை உற்று நோக்கினான். இன்று தனனை விட வேறு சிறந்தவேட்டை யாருமே ஆடியிருக்க முடியாது என்று எண்ணிஎண்ணி, அவன் உள்ளம பூரித்தான்.

அண்மையிற் செடிகளின் அசைவு கண்டான். உற்று நோக்கினான். ஒரு மான் கன்று. இவனைக் கண்டு கலங்கிய கண்களுடன் ஓடத் தொடங்கியது. இதையும் பிடித்தால்! பின் தொடர்ந்து ஓடினான்- அது ஓட இவன் தொடர அம்மங்கை நல்லாள் மலர் பறிக்கும் பொழிலினுள் வந்து விட்டனர். இளமான துள்ளிக் குதித்துக் கொண்டே ஒரு மல்லிகைப் புதரினுள மறைந்து விட்டது.

கண்களை ஒரு முறை சுற்றிக் கூர்ந்து பலவிடங்களிலும நோக்கினான். செடிகளின் அசைவே தோன்றவில்லை. இங்குதானே வந்தது, எங்கு போயிருக்கும்? இளமான் போய் விட்டதே என்ற ஏக்கத்தினால் மீண்டும் ஓர் முறை கண்கள் சுழன்றன.

கண்டான்! திகைத்தான்!! மயங்கினான்!!!

மலர் பறித்த மங்கையின் ஒளி வீசும பேரெழிலால் மயங்கியே போய் விட்டான். கலங்கிய அவன் உள்ளம் காணாதன கண்டு எண்ணாதனவெல்லாம் எண்ணியது.

என்ன அழகு! அழகின் வடிவெலாம திரண்டு அமைந்து கிடக்கின்றதா? ஓவியனின் உயரிய கற்பனைக்கும்

எட்டாத ஒயில் நிறைந்து தோன்றுகின்றதே! காடுறை தெய்வமா? வானின்றிழிந்து மலர்ப்பொழிலிடத்தே தங்கி நிற்கும் வான் மகளா? காமனின் இன்ப இணையான அணங்கா?

மீண்டும் பார்த்த கண் வாங்காது நோக்கிக் கொண்டே இருக்கின்றான். சிந்தனை மேகங்கள் அடுக்கடுக்காகத் தோன்றித் தோன்றி மறைகின்றன. ஒவ்வொரு முறையும் ஒரு புதிய முடிவு தோன்றும். அடுத்த விநாடி அது மறைந்து வேறொன்று அரும்பும்.

அழகிய சாயல். இனிய தண் பொழில். கான் நடுவே இப் பொழிலினிடத்தே அணங்கிற்கென்ன வேலை? பொழிலின் இளமயிலைக் கண்டுதான் மயங்குகின்றேனா? மயிலில் இது போன்று ஒப்புயர்வற்றுச் சிறந்தஎழிலுடன் ஒன்றை இது காறும் கண்டோமில்லையே! ஒருக்கால் மயில் குலத்தினுக்கே பிறந்து எழிலுற விளங்கும் பேரெழில் மயில் போலும்;

இல்லை! இருக்க முடியாது! மயில் அசைந்து அசைந்து பூப் பறிக்குமோ? அதை ஒழுங்கு சேர முடித்துத் தலையிலும் மார்பிலும் சூடிக்கொள்ளுமோ? என்ன மயக்கம் இது? ஒன்றுமே தோன்றாது உள்ளந் தடுமாறுகின்றதே?

திடுக்கிட்டு நின்று சிந்தனைச் சுழலில் தடுமாறியவன் சிறிது அண்மையில் நெருங்குகின்றான். செடிகள் சலசலக்கின்றன. ஒலி கேட்ட நங்கை வியப்புடன் திரும்புகின்றாள்.

கண்டான்! களித்தான்!! மயங்கினான்!! அக்கண்ணின் எதிர்நோக்க வலியின்றித் தலை குனிந்தான்! 'பெண்தானா' என்று அவன் வாய் முணுமுணுத்தது. 'மாதர் கொல்' என்று மனம் ஒத்துக்கூறியது.

“மாலுமென் நெஞ்சு” என்று கூறுவதிலேயே அவனுக்குத் தனி இன்பம். காதலர்களிடையே இயற்கை விதிகள் எதுவும் செல்லாதல்லவா? தோல்வியுற்றவர் களிப்பது தானே காதல் விதி!

கண்டேன்! அணங்கு! கொல்! ஆய்மயில் கொல், கனங்குழை மாதர் கொல் என்று என்னெஞ்சம் மயங்கிற்று என்று கூறுகின்றான்

காமத்துப் பாலின் முதற் பாடல். காதலர்களை நம் கண் முன் காட்டும் வள்ளுவர் அவர்களை முதன் முதல் ஒருவரை ஒருவர் கண்ட நிகழ்ச்சியை ஒரு சில சொற்களில் அமைத்துக் காட்டுகின்றார்.

அச்சொற்களைப் படித்தால் நிழலோவியம் போன்ற காட்சிகள் நம் உள்ளத் திரையில் தோன்றுகின்றன. நம் கண்ணெதிரே அவைகள் நடப்பது போன்றே கண்டு மகிழ்கின்றோம்.

அணங்குகொ லாய்மயில்
கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென்
னெஞ்சு

என்ற பொய்யா மொழியாரின் ஓவியம், நனவின் நிகழ்ச்சியை இனிய எளிய சொல்லோவியமாக்கித் தருகிற வண்மை, நந்தமிழ் மொழி ஒன்றிற்கு மட்டுந்தான் உண்டு என்று எண்ணும்பொழுது அக்காதலனின் களிப்பையும் மிஞ்சுகிறது நம உள்ளக்களிப்பு.

கட்டுரையாளர்: அறிஞர் கா. அப்பாத்துரை

தமிழ் அறிவுக் - - - - களஞ்சியம்

5. தவறான தலைமை

பழமையைத் தொகுத்துப் புதுமையை உருவாக்க உதவ வேண்டிய அறிவுக் களஞ்சிய முயற்சியில்; பழமை என்பது தமிழ்ப் பண்பாட்டைக் குறிக்கும். புதுமை என்பது பகுத்தறிவைக் குறிக்கும். தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்து வரும் தமிழியக்கமும் தமிழுணர்ச்சியுமே. பழமையைப் பேணும் தகுதியுடையவை. ஆனால் அப்பழமையுடன் புதுமை வேண்டிய அளவில் சேராவிட்டால், அப்பழமை பயன் தராது. புதுமையும் பயனும் குன்றாதிருக்க வேண்டுமானால், தமிழியக்கத்தின் முயற்சியுடன் பகுத்தறிவியக்கத்தின் முயற்சியும் ஒன்றுபட வேண்டும். நல்ல காலமாகத் தமிழகத்தில் வளர்ந்து வரும் தமிழியக்கத்தினுடனாக அண்மைக் காலங்களில் பகுத்தறிவியக்கமும் வளர்ச்சியடைந்தே வருகிறது. தமிழகப் பண்பாட்டின் எதிர் காலம் இவ்விரண்டு இயக்கங்களும் ஒன்றுபட்டுக் கலப்பதைப் பொறுத்த செய்தி. ஆதலால் அறிவுக் களஞ்சிய முயற்சியில் இவ்விரண்டு இயக்கங்களின் தலைசிறந்த தொண்டர்களும் வழிகாட்டிகளும் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும்.

தற்போதைய அறிவுக் களஞ்சிய முயற்சியில் இவ்விரண்டு இயக்கத்தவர்களும் இருக்கின்றனரா? இவ்விரண்டு இயக்கங்களின் கொள்கைகள் அம்முயற்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளனவா? இவ்விரு சாராருக்கும் உரம் தரும் ஒருச் சார்பற்ற அறிஞர்கள், வல்லுநர்கள் ஆகியவர்களின் துணையுண்டா? இம்மூன்று திறத்துக்கும் மாறுபட்ட நிலைகள் இல்லை என்று கூற முடியுமா?

தமிழறிவுக் களஞ்சியப் பணியை நிறைவேற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் தமிழியக்கத்திலீடுபட்ட சிறந்த தமிழறிஞர்கள், கலைஞர்கள் ஆகியவர்கள் ஒரு சிலர் உள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அத்துறையின் முடிசூடா மன்னர்கள் ஆன மறைமலையடிகள், சோ. சு. பாரதியார் போன்றவர்கள் தலைவராய் அமையவில்லை. அவர்களைச் சேர்த்தால் அவர்கள் தலைவராகவே இருக்க வேண்டி வரும் என்பதை எண்

ணித்தான் அவர்களை அறிமுகப் படுத்த அப்பணியின் தலைவர்கள் முனையவில்லை என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவியக்கத்தார் எவரும் களஞ்சியப் பணியில் இல்லையெனலாம்.

இரண்டு இயக்கத்தவர்களுக்கும் துணைபுரியும் அறிஞர்கள் மிகமிகச் சிலராகவே இருக்கின்றனர். இச்சிலரும் தத்தம் துறைகளின் அறிவை நாட்டின் அறிவாக்குவதற்கு வேண்டிய மொழியறிவு இல்லாதவர்கள். அதோடு அவர்கள் பெரிதும் தமிழியக்கம், பகுத்தறிவியக்கம் ஆகியவற்றில் ஈடுபாடோ, பற்றுதலோ அற்றவராதலால் அவர்கள் ஒருச் சார்பற்றவர்கள் என்று கூறுவதற்குமில்லை.

தமிழியக்கத்துக்கு, பகுத்தறிவியக்கத்துக்கு மாறுபாடானவர்களே இக்குழுவில் மிகுதியாயிருக்கின்றனர். இந்நிலையில் தமிழியக்கத்தில் ஈடுபட்ட சில கலைஞர்கள் சேர்க்கப்பட்டிருப்பதனால் அவ்வியக்கத்துக்கு ஒரு கெட்ட பெயர் வரக்கூடுமேயல்லாமல் வேறு பயன் ஏற்பட வழியில்லை. அவர்கள் தம்மாலான வரை தமிழ்ப் பண்பைப் பேண முயல்வர் என்பது உறுதி. ஆனால் அடிப்படையில் மாறுபட்ட நோக்கங்களையும் பெரும்பாலோர் ஆதிக்கத்தையும் அவர்களால் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

அறிவுக் களஞ்சிய முயற்சி "தமிழறிவுக் களஞ்சிய முயற்சி" அன்று என்பதனையும், அது தமிழியக்கத்துக்கு மாறுபட்டவர்கள் முயற்சி என்பதனையும் தமிழியக்கத் தலைவர் பெரியார் மறைமலையடிகளின் தலைமையை அது விரும்பிப் பெறாதது ஒன்றே காட்டும். ஆற்றல் மறைந்து கிடந்த தமிழின கருவிலிருந்தே ஆற்றல் வாய்ந்த தனித்தமிழைப் புதிதாகப் படைத்துத் தந்த அத் "தமிழ் படைத்த தந்தையை" மதியாத தமிழரும் தமிழரா?

தமிழகத்தின் அடிமரமாகிய தமிழக அரசியல் முதல் கொண்டு அதன் கிளை, தழை, பூ காய்களாகிய பள்ளி பல்கலைக்கழகம், பணிமனை நிலையங்கள், பத்திரிகையுலகு ஆகிய அத்தனையிலும் தமிழியக்கத்துக்கு மாறான 'போலித் தமிழ்' எதிர்ப்பியக்கமே தாண்டவமாடி வந்துள்ளது. தாழ்த்தப்பட்ட, அமுக்கப்பட்ட தமிழ்ப் பொதுமக்களிடையே, சாம்பல் பூத்த நெருப்பாக இருந்துவந்த தமிழுணர்ச்சி மறைமலையடிகள் போன்ற புலமைப் பெரியார், ஈ. வே. ரா. போன்ற நாட்டியக்கப் பெரியார், பாரதிதாசன் போன்ற கவிதைப் பெரியார் ஆகியவர்கள் தாக்குதலால் கொழுந்து விட்டெழுந்து வருகிறது. அதன் பயனாக இன்று 'போலித் தமிழியக்கம்' கூடப் பெரும்பாலும் பகட்டான தமிழ்ப் பூச்சுப் பூசியே நடமாடுகிறது. ஆயினும் அது தன்னை வரிந்து கட்டிக்கொண்டு, "இனி அடிமரம், கிளை, தழை, பூ, காய்களைக் கவர்ந்து பயனில்லை. வேராகிய தமிழியக்கத்தை ஒழிக்காவிட்டால் எல்லாம் தமிழ் மயமாய்ப் போய்விட்டாலும் போய்விடும்; ஆகவே அதனை ஆணிவேர் சல்லிவேர்

வரை சென்று கல்லி எறிய வேண்டும்" என்று வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது. தமிழர் எதிர்காலப் பண்பாட்டின் அடிப்படைப் பணியும் 'ஆயிரங் காலத்துப் பயிரின்' வளர்ப்புப பண்ணையுமாகிய அறிவுக் களஞ்சிய முயற்சியை இப்போலித தமிழர் கைப்பற்றி விட்டால் தமிழியக்கத்தின் முதலுக்கே முழு மோசம் என்பதைத் தமிழர் புறக்கணித்துவிடலாகாது.

இன்று வடநாட்டிலோ தமிழின மொழியினர் வாழும் அண்டை நாடுகளிலோகூடத் தமிழ்ப் பயிரை யாரும்—அங்கே தமிழ் நாட்டிலிருந்து சென்று புதிதாகப் படையெடுத்து வரும்' தமிழர்' என்போரும் கூட-வளர்ப்பதில்லை. ஆனால் அதே 'தமிழர் என்போர்' தமிழகப் பள்ளிகளில், கல்லூரிகளில், கோயில் குளங்களில், புராண மேடைகளில், பத்திரிகையுலகில், 'புது எழுத்தாளர்' உலகில் வட மொழிப் பயிர் பேணுகின்றனர் அதுவும் தமிழ்ப்பெயரில். பகுத்தறிவியக்கத்தவர்களில் சிலர் கூட அவ்வினமங்கையில் மேய்ந்து தமிழ்ப்புலவர், தனித் தமிழ் இயக்கம் ஆகியவற்றை அலைக்கழித்துப் பேசுகின்றனர். "உயர்நிலைத் தமிழர்களை"க் கெடுத்துவரும் இப்பசப்பு முயற்சிகள் தமிழியக்கத்தின் வேரில் வெந்நீரூற்றுவதன் மூலம் அமுக்கப்பட்ட தமிழகத்தை நன்றாய் அமுக்கப் பார்க்கின்றன.

'முன்னாள் - தமிழ'ராகிய ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அண்மையில் 'இலண்டன்'மா நகர்வரை தமிழ்ப் பரப்பும் பணியைச் செலுத்தி அவ்விடத்துத் தமிழ்க்கழக மொன்றில் பேசுகையில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்தே எழுதுதல் சிறபபு என்றும அப்போது தான் ஆங்கில மொழிபோல் அது வளர்ச்சியுறும என்றும் கூறி, அதே மூச்சில் ஆங்கில மொழி கலந்து பேசக்கூடாதென்றும் கூறியுள்ளார். இம் முரணுரைக்குக் காரணம் என்ன? அவர் கலந்து பேச விரும்பியமொழி ஆங்கிலமன்று வடமொழி! அவர் அண்டை மொழியாகிய, தெலுங்கு, மலையாளமல்ல, இந்திமொழி! ஏன் ஆங்கில மொழிக் கலப்புக் கூடாது? அது அறிவு மொழியானதனால் போலும்! நல்ல மனிதன் என்பதற்கு 'அச்ச மனிதன்' எனறும், பெரிய மனிதன் என்பதற்கு 'வலிய ஆளுகன்' என்றும் அவர்கூற விரும்பமாட்டார்—அவை அவரது தாழ்ந்த இனத்து மொழிகள் தாமே?

நம்மோடு உறவற்ற மொழியே உயர்வுடையது—அதுவும் அறிவோடு உறவற்ற மொழியாய் இருக்கவேணடும்போலும்! தமிழக உயர்நிலையாளரிடையே ஆதிக்க வேட்டை யாடிவரும் இத்தகைய நச்சுக் கோட்பாடுகள் வெற்றியடையாமல் காக்க வேண்டிய பொறுப்பு தமிழ்ப் பற்றுளர்கள், தமிழர் பற்றுளர்களுடையது. இன்று வாயற்ற, வகையற்ற நிலையில் இருக்கும் தாழ்த்தபபட்ட தமிழகத்தை —தமிழ்ப் பொதுமக்களை அவர்கள் காக்காவிடில் 'தமிழக வாழ்வே, போய் வருக' என்று கூறவேண்டியதுதான்! ●



தித்திக்கும் சுவைத்தேனை யுதட்டி னூற்றித்
தென்றலினை யுடல் முழுதும் தேங்க விட்டுக்
குத்தகையா யின்பமதைக் குவிக்கு மென்றன்
குன்றன்னார் தோள் கலையான் காணுமுன்னர்
அத்தானென் றோடிப் போய் அணைத்துக் கொள்ள
அமைத்திருந்த ஆர்வமதை யவர்க்கு முன்னே
சொத்தையாய்ச் சிதைத்தனையே நாணமே! நீ
சுவைக்கூட்டை யுடைத்தெறிதல் முறையோ சொல்வாய்!

பொங்கிவரும் புதுவெள்ளப் பேற்றைத் தாவிப்
புகுந்தலையும் கெண்டையென அவரைக் கிட்டித்
தங்கடற் புறத்தையொரு கையளாவ,
தளிர்முகவாய் தொட்டொருகை அசைக்க, முன்னாள்
திங்களின்முன் நான்நினைத்த எண்ணமெல்லாம்
திறந்துசொல எனை விடுத்து நாணமே! நீ
எங்கேனும் துளிநேரம் ஒதுங்க லின்றி
எதிர்ப்பியக்கம் நடத்துவதும் முறையோ சொல்வாய்?

தண்டமிழர் செம்மலினார் கன்னஞ் சேர்த்துத்
தழுவுகையில் குளிரேற்றும் புதுமைக் கன்னம்
கொண்டலிட்ட பனிக்கல்லோ! தோலெடுத்துக்
கொடுக்கின்ற இளநுங்கோ! எதுதா னென்றே
கண்டுவிடத் துணிந்திருந்தேன்; அவரும் வந்தார்;
கழுத்தசைத்தேன்; குனிந்ததலை நிமிரா வண்ணம்
திண்டாட வைத்தனையே நாணமே! நீ
தித்திப்பைக் கசப்பாக்கல் முறையோ சொல்வாய்?



என்ன நினைத்தாள்?

இராம வே சேதுராமன்

“சடையில்வைத்துப் பின்னிடவே அண்ணா கொஞ்சம்
சம்பங்கிப் பூவாங்கி வருகின்றாயா?
கடை விதிக்குத் தானே போகின்றாய்நீ
கட்டாயம் வாங்கிவா” என்று தங்கை
அடுத்தடுத்துப் பலதடவை சொன்னாள்; நானும்
‘ஆகட்டும்’ எனத்தலையை அசைத்து வைத்தேன்
நடுத் தெருவில் பூக்கடை யொன்றிருக்கக் கண்டேன்
நறுமலர்கள் கிடைக்குமென உள்ளே சென்றேன்.

‘தொடுக்காத பூவுண்டா?’ என்றேன்; முல்லை
தொடுத்திட்ட சிரிப்புடையாள் ‘தருவேன்’ என்றாள்
‘மடல்விரியும் சம்பங்கி தருக’ என்றேன்
மலர் மங்கை இருகையில் அள்ளி வந்தாள்.
தடையின்றி நானெடுத்துக் கொள்ளும் போதில்
தடுமாறிப் பூவென்று கையைத் தொட்டேன்
வெடுக்கென்று மலர்சிந்த உதறி விட்டாள்
வெறியனென்று எண்ணினாள்? வெட்கந்தானா?

‘என்னம்மா நேர்ந்த’ தென்று துடித்துக் கொண்டே
எரிப்பார் போல் அவள் தந்தை ஓடி வந்தார்.
‘ஒன்றுமே இல்லையப்பா! பூவின் கால்தான்
உறுத்திற்று; பூச்சியென்று பயந்து போனேன்’
என்றவளும் எதற்காகப் பொய்யைச் சொன்னாள்?
எனைக்காக்க வேண்டுமெனும் எண்ணத்தாலா?
அன்றியதைப் பிறரறிய வேண்டா மென்றா?
அவள் நினைப்பை இன்றுவரை அறிந்தேனில்லை!

ஞானசௌந்தரி—ஜெமினி

கோவலன், சாவித்திரி, வள்ளி ரகத்தில் நாடகமேடையில் ஊறிப்போன, கிருத்தவ மதப் புராணக் கதைதான் இந்த 'ஞானசௌந்தரி'.

சிற்றன்னையின் கொடுமைக்கு இலக்கான இளவரசியை, வேற்று நாட்டு இளவரசன் காத்து, மணந்து, மீண்டும் சூழ்ச்சியில் சிக்கித்தவித்து; 'கன்னிமேரி'யின் அருளால் ஒன்று சேர்ந்ததாகக் கதை. இதை அறியாதார் குறைவு; அவ்வளவு பழகிய கதை.

ஜெமினியாரும் சிட்டாடலாரும் ஒன்றுக்கொன்று சற்று மாறுபட்ட முறையில் இதைத் தயாரித்திருக்கிறார்கள். தேவையில்லாத போட்டிதான் இது. "கதையில்லையா எடுக்க; கருத்தில்லையா தொகுக்க?" என்று நூறு நூறு விமர்சகர்கள் கதறிய பின்னும் விடுபடாத போட்டியில் இது ஒன்று. "சினிமாக் கதையில் போட்டி, தயாரிப்பவர்களின் 'விஷப் பரீட்சை" என்பதை அடித்து உணர வைத்து விட்டது இந்த 'ஞான சௌந்தரி'ப் போட்டி!

நடிகர்களையும் பாட்டையும் கொண்டே பணத்தை அள்ளி விடலாம் என்ற எண்ணத்தில் இரண்டு தயாரிப்பாளர்களிடத்திலும் ஒற்றுமை காணப்படுகிறது! இதுதான் இரண்டிலும் காணப்படும் ஒரே ஒற்றுமை! இதில் ஜெமினி அடைந்திருக்கும் 'படுதோல்வி'யை நினைத்தால் 'பரிதாப'மாகத்தான் இருக்கிறது! மகாலிங்கத்தின் பாட்டுக்குப் போட்டிபோட எம். கே. ராதாவால் முடியாது என்ற நினைவில்தானோ என்னவோ ஜெமினியார் ராதாவுக்கு யாரோ ஒரு 'செம்மங்குடிக் குரல'னைப் பின்னணிப் பாடல் பாடவிட்டிருக்கிறார்கள். ராதா வாயசைக்க, 'அந்த நபர்' பாட, கேட்கும் ரசிகர்கள் 'அந்தோ பரிதாபம்!' என்று தலைகுனிய— "இதை அனுபவித்த பின்னும் ராதா ஜெமினியை விட்டு வெளியேறாமல் இருக்கிறாரே" என்று நான் வருந்த— "கர்மம்! காலம் பாழ்; காசும் பாழ்." என்ற ஏக வசனத்தில் கூறிவிட்டு ரசிகர்கள் தியேட்டரை விட்டு வெளியேற— ஜெமினி 'ஞானசௌந்தரி' "எல்லா ரசிகர்களும் வெளியேறினாலும் விடாது நடைபெற்று" வெற்றி பெற்று விட்டது.

நாடகமேடையில் பெரும் புகழ் பெற்று, 'அனாதைப் பெண்' படத்தில் அதை நிலைநாட்டி, ரசிகர்களின் உள்ளத்தில் நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த ராதா அழகிய தோற்றமுடையவர். 'சந்திரலேகா' வைப் போலவே 'ஞானசௌந்தரி' யிலும் ராதாவைப் 'படுகொலை' செய்து பாழாக்கி விட்டார்கள். ஜாதீய சூழ்ச்சியால், ஜெமினி செய்யும்

அயோக்கியத்தனத்தில் சிக்கி, 'மறைந்த மாபெரும் நட்சத்திர'மாய் விடக் கூடாதே, ராதா, என்பதே என் கவலை. பொறுமையாலோ வெறுப்பாலோ இதை நான் கூறவில்லை. படத்தைப் பார்த்தபோது நெஞ்சம் கொதித்தது. ஆகவேதான் கூறுகிறேன். அழகிய முகத்தில், விளக்கெண்ணெய், கத்தாழைக்குழம்பு, வெண்டைக்காய்ச் சாறு- இம்மூன்றையும் சேர்த்துக் குழைத்துப் பூசிப் 'பணம்போனாலும் பரவாயில்லை; ராதா தொலையவேண்டும்' என்ற ஒரே நோக்கோடு 'ஞானசௌந்தரி'யைத் தயாரித்திருக்கிறார்கள்!' என்றே நினைக்கிறேன்.

ஜெமினி சௌந்தரி, அசல் கிறித்துவச்சியல்ல என்று நினைக்கிறேன். அக்ரகாரத்திலிருந்து 'கன்வர்ட்' ஆனவளாயிருக்கவேண்டும்! "போறேளா?" "உயிரை விட்டுடுவள்" போன்ற முப்புரி மொழிகள் தாராளமாக நடமாடுகின்றன! மேலும், கன்னிமேரியைத் துதிக்கும் போது, இந்துக் கடவுள்களும் அவள் வாயிலிருந்து வெளிப்படுகிறார்கள். ஆகவே அவள் அக்ரகார சௌந்தரி என்றே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது!

அவசரமாகத் தயாரிக்கப்பட்டு. ஒரு 'துடைப்பு' (*WIPE*) க்கூட இல்லாமல் விளக்கெண்ணெய்த்தனமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது ஜெமினி ஞானசௌந்தரி. வசனத்தில் ஒரு வழி இல்லை; பாடல்களில் சுவையில்லை; நடிகையிடம் நடிப்பே இல்லை; ராதாவிடம் அழகே இல்லை!- இதில் கண்ட முடிவு "ஜெமினியில் சரக்கே இல்லை!"

ஆயிரம் அழுகல் பழங்களுக்கு இடையில் சிலநல்லபழங்கள் கிடைப்பதுபோல் இதிலும் சில நல்ல பகுதிகள் இருக்கின்றன. கனவு காணும் கட்டம், கண்ணாம்பாளின் நடிப்பில் சில இடங்கள் ஆகியவை பார்க்கத் தகுந்தவையாய் இருக்கின்றன. மொத்தத்தில் வாசகனுக்கு இது மீண்டுமொரு படுதோல்வி!

"வணங்காமுடி"

[சிட்டாடல் ஞானசௌந்தரி விமர்சனம் அடுத்த இதழில் வரும்]

கட்டாய இரண்டாவது மொழி

இந்தி தமிழ்நாட்டில் மீண்டும் புதியதோற்றத்துடன் நுழைக்கப்படுகிறது. தமிழ் நாட்டவர் விரும்பினால் எடுத்துக்கொள்ளலாம். விரும்பாவிட்டால் படிக்க வேண்டுவதில்லை என்ற திட்டம் மாறிக் கட்டாயமாய்க் கற்க வேண்டியதுதான் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ் நாகரிகத்துக்கும் பண்பாட்டிற்கும் ஒவ்வாத, கலை நயமோ, பொருள் வளமோ இல்லாத ஒரு சிறிதும் பயனற்ற ஒரு ஒரு மொழியை நம் இளைஞர் படித்தே யாகவேண்டிய ஏற்பாட்டிலுள்ளார்கள். மூன்று மொழிகள் இளைஞர்மீது கட்டாயமாகத் திணிக்கப்படுவதன் தவறை அறிஞர்கள் எடுத்துக் காட்டி வன்மையாக மறுத்திருக்கின்றனர். தமிழ் அறிவு சான்ற பெரியார்களின் அறிவுரைகட்குச் செவி சாய்த்து இரண்டாவது தொகுதியிலுள்ள மொழியைக் கற்க வேண்டுமென்று விரும்பாத எவரும் படிக்க வேண்டுவது கட்டாயமன்று என்ற முடிவிற்கு விரைவில் அரசினர் வருவார்கள் என நம்புகிறோம்

-செந்தமிழ்ச் செல்வி
(ஜூலை 1948)

எழுதியவர்: கி. ர. சண்முகம்

இருள் தந்த வாழ்வு

'பையன் படிக்கிறான்' என்றுதான் பெற்றோர்கள் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் அவன் கருத்தெல்லாம் தனக்கொரு காதலியைத் தேடுவதில் சென்றுவிடுகிறது என்பதை அவர்கள் அறிவார்களா என்ன?

“எவனோ சொன்னானாம் உலகமே ஒரு நாடக மேடை” என்று. அவனை இன்றைக்கு நான் கண்டால், “அப்பா! இது நாடகமுமல்ல, மேடையுமல்ல; இது ஒரு “பைத்தியக்கார ஆஸ்பத்திரி,” என்று சூடாகப் பதில் சொல்வேன். இதுவும் ஒரு பைத்தியக்காரத் தனம்தானோ? போகட்டும்!

‘மேரிவைலட்’ என்றதும் ஒரு இளம்பெண், அத்துடன் அழகியும் கூட என்றுதானே உருவகப்படுத்துகிறீர்கள். ஆம், உண்மைதான். கிருஸ்துவப் பெண், சிலுவையின் சிஷ்யை வயது பதினெட்டு. சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஒரு நர்ஸ். நல்ல கட்டழகு. புன்னகை தவழ் வதனம். நாகரிக மெருகு கொடுத்த தங்கப் பதுமை போங்களேன்!

தற்காலத்தில், டாக்டர்களால் கண்டுபிடிக்க முடியாத ஒரு கேஸுக்கு “ஹார்ட்பெயிலியர்” என்று சொல்லுகிறார்கள். அதுதான் மேரியின் தந்தை ஜான்மார்ட்டின் என்பவனுக்கு நேர்ந்தது. மேரியின் தாய் ஒரு ஆசிரியை. ஒரே பெண்—வருவாய் சொற்பமே—செட்டான வாழ்க்கை—பகட்டான வாழ்க்கை நடத்தப் பெண்ணுக்கு ஆவல்—ஆசை இருக்கிறது தாசில் செய்ய, ஆனால் வழிதான் இல்லை!

ஃ ஃ ஃ

ஹாஸ்டல் வாழ்க்கையின் அருமை. அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். அடடா! அதன் இனிமையையும், இன்பத்தையும் வர்ணிக்க முடியுமா என்ன?

“பார்த்தாலும், படித்தாலும், படிக்கின்ற பிள்ளைகளாய்ச் சேர்ந்தாலும், ஹாஸ்டலே இனிக்கும், இனிக்குமையே” என்று, எதுகை மோனைக்குக் கட்டுப்படாத ஒரு சுதந்திரக் கவி உண்மையைச் சொல்லிப் போனான்!

ஹாஸ்டல் வாழ்க்கையைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளாத எந்த மாணவனையும் காண்பது அரிது! அந்த

கைய ஹாஸ்டலின் அருகே ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியும் இருந்து, அதில் மயக்கும், இளம் கன்னிகைகளான, நாகரிக நர்சுகளும் இருந்து விட்டால்......?......!

எங்கள் ஹாஸ்டல் மாணவர்களில் எவராவது காய்ச்சல் என்றோ, வயிற்றுவலி என்றோ, மெடிகல் வார்டுக்கு வாரம் ஒரு முறையாவது போகாமல் இருக்கமாட்டார்கள். இந்தக் கோஷ்டியில் நானும் ஒருவன் தான்! வாரம் இருமுறையாவது "ஸ்மெல்லிங் சால்ட்" தருவீர்களா என்று போய்க் கேட்பதுண்டு.

"உங்கள் ஹாஸ்டலுக்குத் தனியாக ஒரு ஆஸ்பத்திரியே வேண்டும்போல் இருக்கே?" என்று ஒருநாள் அந்தக் குயில் மொழி நர்ஸ் கேட்டாள்.

"அதில் தாங்களே நர்ஸாக வந்துவிட்டால் மிகுந்தமகிழ்ச்சியடைவேன்" என்றேன் நான்.

"அதுசரி. உங்கள் காலேஜில் பூந்தோட்டம் ஜமீன்தார் மகன் —பெயர் என்னவோ......ஆம், நீலமேகம்! ரொம்ப, தங்கமான 'ஸ்டுடண்ட்' பாவம், மூன்று நாட்களாகச் சொல்லியனுப்பினார், கொஞ்சம் 'டர்பன்டைன்' வேண்டும் என்று. தயவுசெய்து கொஞ்சம் கொண்டு போய்க் கொடுத்துவிடுகிறீர்களா?"என்றாள், அம்மெல்லிடையாள்.

எனக்கு வெகுநாளாக எண்ணம் தான்—எண்ணம் என்ன —வயிறெரிச்சல்தான்! 'என்னடா, நம்தான் ஒரு நோக்கம் கருதி ஆஸ்பத்திரிக்கு வருகிறோம். இதே மாதிரி ஹாஸ்டலே கிளம்பிவிட்டால், இனிப் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளைகள், முகவசீகரமுள்ள இளைஞர், கௌரவமுள்ள உத்தியோகஸ்தரின் வாரிசுகள் — இத்தனை பேர்களுக்கு நடுவே நமக்கு எங்கு "சான்ஸ்" கிடைக்கப் போகிறது? என்று.

ஃ ஃ ஃ

ஜாதி, மதம், ஆசாரம்—இவைகளையெல்லாம் ஏனோ என மனம் ஒப்புக் கொள்ள மறுத்தது! மணம் செய்து கொள்வதாய் இருந்தால் கலப்பு மணம் செய்து கொள்வதா? அல்லது காதல்மணமே போதுமானதா? இது எனக்கு ஒரு பெரிய பிரச்சனை! அடிக்கடி என் மனம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விடும். "என்நாளும் இன்பமே; துன்பமில்லை" என்று ஒரு 'ஆத்மா' சொன்னது உண்மை போலும்.

தச்சனின்றிக்கொத்தனின்றி இன்ப மாளிகை கட்டினேன், வர்ணங்கள் தீட்டினேன். மணம் கமழ் நந்தவனத்தை ஆக்கினேன். படுக்கையறையைச் சோடனை செய்தேன் — அதில் என் "கோகிலத்தை" உட்காரச் செய்து, அவள் மடிமீது படுத்து........."அடடா! இது வெறும் கற்பனை உலகமடா!!

இந்த அழகில் எஞ்சினீரிங் படிப்பாம், ட்ரிக்னமெட்ரியாம், தியரியாம்—மண்ணாங் கட்டியாம்! இவையெல்லாம் மண்டையில் தான் ஏறுமா? ஒரு நாளுமில்லை. ஹாஸ்டலில் நிம்மதியாய்ச் சாப்பிடவேண்டியது. ஒய்யாரமாய்க் காலேஜுக்குக் கிளம்ப வேண்டியது. நடுவே, ஆஸ்பத்

திரியில் மனவைதப் பறிகொடுத்துவிட்டு கடைப்பிணம் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு காலேஜுக்குப் போய்ச் சேரும். 'லெக்சரர்' என்ற ஒரு 'ஜீவன்' இருக்கிறதே, அது வந்து ஒரு மணி நேரம் இடைவிடாது எதையோ 'தொண, தொண' வென்று, கடனுக்கு உளறித் தள்ளிவிட்டுப் போகும். நானும் எதையோ கிறுக்கித் தள்ளி விட்டு வருவேன். அது சில சமயம் காதல் கடிதமாய் இருக்கலாம், லெச்சரர் திரு உருவப் படமாய் இருக்கலாம், பெரிய எஞ்சினியரானல் கையெழுத்துப் போடுவதற்காகப் பழகிக்கொண்ட ஒரு நூற்றைம்பது, இருநூறு கையெழுத்துக்களாகவும் இருக்கலாம். அல்லது தகப்பனருக்கு, இல்லாத புத்தகங்கள் வாங்கியதாகவும், கைக்கெடிகாரம் திருட்டுப் போனதாகவும, பேனக் காணமல் போனதாகவும், அவரை நம்ப வைத்துப் பணத்திற்கு எழுதிய ஒரு ஜோரான கடிதமாகவும் இருக்கலாம். இவ்வளவு கருத்தாய்ப் படிக்கும் அண்ணத்தைகள் எத்தனையோ உண்டு. நான் மட்டுமல்ல!

கல்யாணத்தைப் பற்றியோ அல்லது பந்துக்களின் பெண்களைப்பற்றியோ யோசிக்கும்படி என தந்தையிடமிருந்து பரிவாகக் கடிதம் வரும். அந்தக் கடிதம், மாணவர் அரட்டைக் கூடத்தில் சுக்கு நூருகக் கிழிக்கப்பட்டுப் பரிதாபத்துடன் சிதறிக் கிடக்கும்.

"தகப்பனராம், தகப்பனர்! அன் எஜுகேடட் கேள்ஸுகளைக்கட்டிக்கொண்டு யாரப்பா மாரடிப்பார்? சொந்தமாம், பந்துவாம்! நான் உத்தியோகஸ்தய் இருந்தால், மனேவியும் தகுந்த அந்தஸ்தில் இருக்க வேண்டாமா? இதையெல்லாம் யோசிப்பதில்லை. கல்யாணம், கல்யாணம் என்று கடிதம எழுதி என் பிராணனே வாங்குகிருர். சுத்தக் கர்னுடகம்! இருபதாம் நூற்ருண்டிலுமா பெற்ரேர்கள் இவ்வளவு மௌடீகமாய் இருப்பார்கள்? பகுத்தறிவுத் தீ திக்கெட்டும் பரவுவது இவர்களுக்கு மட்டும் ஏனே புலப்படவில்லை ம்ம்...... நாம எதற்காகப் புத்திபுகட்டவேண்டும்—காலம் செய்யட்டும் அந்த வேலையை!" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் நடக்கும். கண்ணியமான சொற்பொழிவு. ஆணித்தரமாகச் செய்து விட்டதாக ஒரு மமதை! காளைகள் காட்டில் சிரிபபொலி கிளம்பும். அத்துடன், அன்றைய நிகழ்ச்சியும் முடிவுறும்.

ஃ ஃ ஃ

ஒருவாறு, வழக்கம்போல் அரைவருடத் தேர்வு முடிந்தது.

'வயிற்றுவலி அதிகம்' என்று சீட்டு வாங்கிக்கொண்டு, ஆஸ்பத்திரியில் ஒருகட்டில் 'ரிஸர்வ்' செய்து கொண்டேன். வயிற்றுவலி எனக்கல்லவா தெரியும்! மருந்துகள் எல்லாம் எதிரே இருந்த தோட்டத்தில் சரண் புகும். நான் விரும்புவது இந்த மருந்தல்லவே......!

"மேடம்! ஒரு நல்ல மருந்து வேண்டும். தாங்கள் மனம் வைத்தால் கொடுக்கலாம். தாங்கள் பெரிய மனது வைத்து...?"

"என்ன மருந்து அது?"

"அதுதான், 'அதரபானம்' என்றேன்" தணிவாக.

"என்ன தேர்ப்பானமோ!" என்று கிண்டலாகச் சொல்லி

விட்டு, அங்கிருந்து நகர்ந்து விட்டாள் மேரி.

* * *

இரவுமணி பதினொன்று இருக்கும். அன்றெல்லாம் சிறு தூற்றலாகவே தூறிக் கொண்டிருந்தது. எங்கும் ஊதல் காற்று. உண்மை நோயாளிகளை சற்றுக்கண்ணயர்ந்திருந்தனர். குளிர்ந்தகாற்று என் உடலையும் உலுக்கியது. நன்றாகப் போர்வையால் உடம்பைப் போர்த்திக்கொண்டு, கண் விழித்தபடி நான் படுக்கையில் படுத்திருந்தேன். தூக்கம்கூடவா எனக்கு வரும்!

"யூஸ்லெஸ் ரெயின்—கேட்ஸ் அண் டாக்ஸ் கியூமென்ஸ்— இந்த இழவுக்கு 'நைட் டியூட்டி' வேறே. நல்ல, 'இரவு ரோந்து' உத்தியோகம்!" என்று சலித்துக் கொண்டே உள் நுழைந்தாள், மேரி. நான் அசைவற்றுக் கிடந்தேன். சற்று நேரம் கழித்து நான் மெதுவாகப் போர்வையை நகர்த்திப் பார்த்தபொழுது, என் கட்டிலுக்கு எதிரே கிடந்த பிரம்பு நாற்காலியில், தலையைத் தனது இடது கையில் தாங்கியபடி, ஆழ்ந்த யோசனையோடு உட்கார்ந்திருந்தாள்.

நான் என் பகுத்தறிவுக்குச் சற்று வேலை கொடுத்தேன்:

"ஐயோ........அம்மா........ வலி பொறுக்க முடியவில்லை. அப்பா...உயிர் போகுதே...... ஐயோ...உம்...ஆ...மேடம்!"

எதிர்பாராத அபயக்குரலைக் கேட்டு, 'அவள்' ஓடோடி வந்து என் கையைப் பிடித்தாள்—நானும் அவளது கையைப் பிடித்துக்கொண்டேன், இறுக்கமாக! "மிஸ்டர்! என்ன செய்கிறது?"

"........ம்ம்........"

"டெம்பரேசர்கூட இருக்கிறதே." அவள் கை எனது நெற்றியை வருடியது. ஒருவித மின்சாரத் தாக்குதல்—அதன் அதிர்ச்சி போலும். வியர்த்து விட்டது.

"மேடம்!.........ம் மேரி!!...... ஐயோ......பயமா இருக்கே...... நெஞ்சை அடைக்குதே......... அம்மா...!" வேல்பட்ட களிற்றின் அலறலைப் போன்ற இடி முழக்கம் — கண்ணைப்பறிக்கும் மின்வெட்டு! மின்சார விளக்குகள் ஒரே இருளைக் கக்கின – எங்கும் அந்தகாரம்!

ஒரு விநாடி எங்கும் அமைதி!

'யாராவது பார்க்கப் போகிறார்கள்? இன்று வேண்டாம்...' என்று கெஞ்சும் குரலில் என் காதண்டை மெதுவாகச்சொல்லி அவளது செவ்விதழ்களை எனதுடன் பிணைத்தாள். நான்கு அதரங்களும் ஒன்று சேர்ந்து "அதரபானம்" அருந்தின!

மேரி என்னை விட்டுப் பிரிந்தாள். விளக்குகள் மீண்டும் பிரகாசித்தன. மதுவுண்ட வண்டைப் போல் மயங்கிக் கிடந்தேன். எனக்கு ஆஸ்பத்திரியே சுழன்றது. சில நூல் ஆசிரியர் 'பூமி சுற்றுகிறது' என்று மூன்றாவது வகுப்பில் சொன்னது எவ்வளவு உண்மை என்பதை அப்பொழுதுதான் என் மனம் நம்பிற்று.

மகிழ்ச்சி தங்கியது!

சிறுகதை: கே. என். எஸ். ராஜன்

"தங்கம்," என்று கூறி அவளது கைகளை மெதுவாகப் பற்றினன் தங்கவேலு. உணர்ச்சியால் தாக்குண்ட அவளது மென்மையான உடல், கொடிபோல் வளைந்தது; முகம்நாணத்தால் கவிழ்ந்தது. "என்னை விடுங்க", என்று சொல்லி, அவனிடமிருந்து தன் கையை விடுவித்துக்கொள்ள முயன்ருள் தங்கம். தங்கவேலுவின் இதழ்கள், கண்ணீரால் நனைய. அவளை அன்புடன் பார்த்தாள். அந்தப் பார்வை அளவற்ற சோகக்குவியலைத் தன்னுள் கொண்டதாக இருந்தது. "தங்கம்! எதுக்கும் கவலைப் படாதே! உன்னை நான் எந்த விதத்துலேயும கட்டிக்கிறேன் ...." என்று கூறி, அவளது கண்ணீரைத் துடைத்தான் தங்கவேலு. ஆனல் தங்கம் கண்ணீர் வடித்துக்கொண்டே, "அந்த முருகன் இருக்கற வரைக்கும், நம்ப எண்ணம் கட்டாயம் நிறைவேறப் போற தில்லே," என்று கூறியதும், தங்கவேலு சிந்தனையிலாழ்ந்தான்; அவன் முன் ஒரு உருவம் சீறி எழுந்து நின்றது. ஆம்; முருகன்! அவனது வைரி! -தங்கவேலுவின் உடல் சிலிர்த்தது. தங்கத்தின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. "தங்கம்! அழாதே! அவனுக்கு நான் எந்த விதத்திலும் புத்தி கற்பிச்சிடறேன்;" என்று கூறி எழுந்த தங்கவேலு ஒன்றும் தோன்ருமல், சிலைபோல்நின்று விட்டான். முருகன் அவன் முன் தன் மீசையை முறுக்கியபடி நின்ருன்; அவன் கண்களினின்றும் தீப் பொறி எழ; "டேய் ... தங்கவேலு! ஊராரு சொன்னதை இத்தினி நாளா நெசம்னு நம்பலே: இப்ப நான் நேரடியாப் பார்த்திட்டேன்," என்று கூறி அவனருகில் சென்று, அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டான். தங்கவேலுவின் உடல் பயத்தால் நடுங்கியது. இருந்தாலும், தங்கத்தின் முன் தனது கோழைத்தனத்தை வெளிப்படுத்த விரும்பாமல், "டேய்... முருகா? மரியாதை கிரியாதை இல்லாமே பேசறே நீ; எனக்குக் கோவம் வந்திடும்: கையைவிடு," என்று கூறி, தன் கைகளை இழுத்துக் கொள்ள முயன்ருன். ஆனல் முருகன் அவன் மீது 'குபீர்," என்று பாய்ந்து; முதுகிலும், கன்னத்திலும் 'பளீர் பளீர்' என்று, பன்முறை அறைந்தான். தங்கம். "ஓ", என்று கத்தி விட்டாள். முருகன் தங்கத்தின் அருகில் ஓடிவந்து, "இந்தா தங்கம்! இந்தப்பயல் இருக்கறதினலே தானே நீ

காதலர்களை அரிவாளைக் கொண்டு பிரிக்க முயன்ருன் முருகன்; ஆனல் தங்கத்தின் சாமர்த்தியம் அவன் எண்ணத்தில் மண்ணைப் போட்டது.

என்னைக் கட்டிக்கிட மாட்டேங்கிறே? இவனையே இன்னிக்கு ராத்திரி என் அரிவாளாலே தீர்த்துட்டா? இதைச் செய்யாட்டி என் பேரு முருவ னில்லே... ஆம்...''; என்று உணர்ச்சியுடன் கூறிவிட்டு நடந்தான். தங்கத்தின் மார்பு, 'படபட', வென்று அடித்துக் கொண்டது. அவள் கண்களை நீர்த்திரை மறைத்தது.

ஃ ஃ ஃ

அன்றிரவு தன் படுக்கையில் இங்குமங்கும் புரண்டு கொண்டிருந்தான் தங்கவேலு. அவனுக்கு உறக்கம் வரவில்லை. வலுவில் கண்ணிமைகளை மூடிக்கொண்டான். அவன் முன், பல பயங்கர உருவங்கள் தலைவிரித்தாடின; அவன் இதழ்கள் மீண்டும் திறந்தன - சிறிது நேரம் சிந்தனை உலகத்தில் சஞ்சரித்த பின் தன் கண்களைத் திரும்பவும் மூடிக்கொண்டான்.

அவன் வீட்டுக் கதவை யாரோ 'தடதட' வென்று தட்டுவது போலிருந்தது. பயத்துடன் எழுந்தான் தங்கவேலு. கதவு இன்னும் பலமாகத் தட்டப்பட்டது. அவ்விதம் தட்டுவது முருகன் தான் என்று ஊகித்துக் கொண்ட அவன் எவ்விதமாவது தப்பிக்க வழிதேடினான்; அங்குமிங்கும் ஓடினான். அதற்குள் வெளியிலிருந்து ஒரு குரல் வந்தது. "டேய் தங்கவேலு: ஓடித் தப்பிக்கலாம்னு பாக்கிறியா? அதெல்லாம் முடியாது. மரியாதையாக் கதவைத் திறக்கிறியா? இல்லாட்டி நானே வரட்டுமா?'' தங்கவேலுவின் உயிர் பதறியது; ஆனால், வாசற் கதவு உடனே 'தடால்', என்று கீழே விழ, முருகன். தன் கையில் கூரிய அரிவாளுடன் தங்கவேலுவை நோக்கிப் பாய்ந்தான். தங்கவேலு "ஐயோ", என்று கூச்சலிட்டான்; தங்கவேலுவின் தலை மறுகணம் வெட்டுண்டு கீழே விழுந்தது!

தன் படுக்கையிலிருந்து, அலறியபடி எழுந்தான் தங்கவேலு. எவ்வளவு பயங்கரக் கனவு......? இல்லை, இது கனவல்ல, சிறிது நேரத்திற்குப் பின் உண்மையாகவே நடக்கப் போகும் சம்பவத்தின் பிரதிபலிப்பு! அவன் மனம் விம்மியது. 'எங்கேயாவது ஓடிவிடலாமா?', என்று எண்ணினான். 'தங்கத்தின் கதி?' என்ற கேள்வி குறுக்கிட்டது. அவன் எண்ணங்கள் தாறுமாறாகச் சுழன்றன. முடிவில், எங்கேயாவது ஓடிவிடத் தீர்மானித்தான்.

ஆழ்ந்த இருளில் தட்டுத் தடுமாறி நடந்தான் தங்கவேலு; அவன் கால்கள் அவனை முடிவில்லாத ஓரிடத்திற்கு இழுத்துச் செல்லப் போவதாக, அவனைப்பயமுறுத்தின. ஒரு தெருவின் நடுவில் வந்து கொண்டிருந்தான்; அவன் கால்கள் சற்றுத் தயங்கின. அந்தத் தெருக்கோடியில் தான் முருகன் வீடு இருந்தது! அந்த வீட்டினருகில் வந்து விட்டான்; அவனது கண்கள், வீட்டினுள் ஊடுருவின; ஒரு மங்கிய வெளிச்சத்தின் முன் மூன்று பேர் உட்கார்ந்து, ஏதோபேசிக் கொண்டிருந்தனர். முருகனும்

இருந்தான். மற்ற இருவர் யாரென்பதையும் அறிந்து கொண்டான். ஆனல் அவர்கள் பேசுவதை அவன் அறிந்து கொள்ள முடியவில்லையே! அவன் மனம், அவர்கள் பேச்சைக் கேட்க, விழைந்தது. தங்கவேலு, அடிமேலடிவைத்து, வீட்டிற்குப் பின்புறம் போய் நின்று கொண்டான். இப்போது அவர்களது பேச்சு அவன் காதில் நன்ருக விழுந்தது.

"அப்படின்னு, நம்ப முருவனுக்கே கொடுத்துட உங்களுககு இஷ்டந்தானே?", என்று கேட்டார் முருகனின் தகப்பனர். "ஆமாட......... தங்கத்தைக் கட்டாயம் நான் முருவனுக்கே கொடுத்துடறேன்,'' என்று கூறினர் தங்கத்தின் தந்தை!

தங்கவேலுவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவன் இன்னும் அங்கேயே நிற்க விரும்பவில்லை. அவன் கால்கள், ரெயில்வேஸ்டேஷனை நோக்கி விரைந்தன.

சிறிது நேரத்தில், "தடதடா- தடதடா......". என்ற சத்தத்துடன் வண்டி வந்து நின்றது; அது சென்னைக்குப் போகும் வண்டி! அதில் முட்டி, மோதிக் கொண்டு ஏறி உட்கார்ந்தான் தங்கவேலு. வண்டியும் நகர்ந்தது!

கணக்கற்ற எண்ண அலைகள், அவனது உள்ளமென்னும் கடலில் வந்து வந்து மோதின. அவன் தங்கத்தை நினைத்துக் கண்ணீர் விட்டான். அந்தப் பாவி முருகன் தங்கத்தைக் கட்டிக்கிட்டா, என்ன பாடு படுத்துவான்!' என்று எண்ணும்போது, அவன் இதயம் துடித்தது. "என் பிரிவைத் தங்கம் பொறுப்பாளா? அவள் விம்மி விம்மி அழுவாளே? முருகன்!- அவனைத்தான் கட்டிக் கொள்ளவேண்டுமென்றறிந்ததும். அவள் மனசு என்ன பாடுபடும்? ஐயோ, தங்கம் ......"- என்றெல்லாம் எண்ணியது அவன் மனம்.

வண்டி ஓடிக்கொண்டிருந்து; தங்கவேலு, இப்போது வண்டி நிற்கப்போகும் ஸ்டேஷனில் இறங்கிவிடத் தீர்மானித்தான். இறங்கிய பின்...—? அவன் இதைப் பற்றிச் சிந்தனை செய்யவேயில்லை. எப்படியாவது இங்கே இறங்க வேண்டும் என்கிற முரட்டுப் பிடிவாதம்!

வண்டி நின்றது. பலர் இறங்கினர். தங்கவேலுவும் இறங்கினன்! கூட்டத்தை ஒரு கையால் விலக்கியபடி வெளியே வந்தான். ஆனல் மறுவினடி, அவன் ஒரு உருவத்தை அங்கே பார்த்துவிட்டான். தங்கம்! ஆம்; அவளும், அந்த வண்டியிலிருந்து இறங்கி, கூட்டத்தை விலக்கியபடி வெளியே வந்துகொண்டிருந்தாள். தங்கவேலு மகிழ்ச்சியால் துள்ளினன். "தங்கம்! என்று கூச்சல் போட்டான். அவள் திரும்பிப்பார்த்தாள்; தன்முகம் மலர, அவனிடம் ஓடிவந்தாள். தங்கவேலு, அவளது கையை இறுகப்பிடித்துக் கொண்டு, வெளியே வந்தான். தங்கத்தின் இதயம் ஏனே 'படபட', வென்று துடித்தது. தங்கவேலு, தங்கத்தின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "தங்கம்! நீ எப்படி இங்கே வந்தே? ஏன்

வந்தே?", என்று கேட்டான். அவளுக்கு அழுகை வந்து விட்டது. "என்னை முருவனுக்கே கொடுத்துடறதா, என் அப்பா நேத்து ராத்திரித் தீர்மானிச்சுட்டாரு: இதை நான் கேட்டுக்கிட்டேயிருந்தேன் உள்ளேயிருந்து, என் மனசு அதுக்குச் சம்மதிக்குமா? என்னாலே செத்தாலும் அந்த முருவனோடே-காட்டு மிருகத்தோடே - வாழ்க்கை நடத்த முடியுமா? அதுதான் எங்காச்சியும் ஓடிடலாம்னு வந்தேன், நீங்களும் அதுக்காகத்தான் கிளம்பிட்டீங்களா?" என்று தங்கம் கேட்டதும், தங்கவேலுவின் கண்களில் நீர் ததும்பியது. "தங்கம்! அதுக்காகத்தான நானும் ஓடியாந்துட்டேன். எதிர்பாராதவிதமா, சேர்ந்துட்டோம்! இனிமே என்னை விட்டு நீ பிரிய மாட்டியே?" என்று தங்கவேலு கூறியதும், தங்கம், முகத்தில் புன்முறுவல் தவழ, "ஊஹூம், மாட்டேன்," என்று கூறினாள்.

ஃ ஃ ஃ

மாரியப்பன், அந்த ஊரில் செல்வாக்கு வாய்ந்தவன்; ஏழைகளைக் காப்பாற்றுவதில் அதிகம் முனைந்த அவனிடமே, தங்கவேலு வேலைக்கு அமர்ந்தான். மாரியப்பன், அவனுக்கு தன் வீட்டுக் கொல்லையிலேயே ஒரு குடிசை கட்டிக் கொடுத்தான். தங்கம், மகிழ்ச்சியுடன், அவனுக்குச் சோறு சமைத்துப்போட்டாள். ஒரு நாள் மாரியப்பன் தங்கவேலுவை அழைத்தான். "நான் உன்னை ஒண்ணு கேக்கணும்னு ஆசைப்படறேன்......," என்று மாரியப்பன் கூறியதும், தங்கவேலு, "சும்மாக் கேளுங்க" என்றான். மாரியப்பன் சிரித்துக் கொண்டே, "உன்னோட ஒருபொண்ணு இருக்குதே: அது யாரு? உன் பெண்சாதியா?," என்று கேட்டதும், தங்கவேலு தன் தலையைக்குனிந்து கொண்டான். பிறகு சமாளித்துக்கொண்டு, "அதுக்கு எங்க ஊருங்க: இனிமேல்தான் கட்டிக்கிடணும்", என்று தங்கவேலு கூறியதும் மாரியப்பன் சிரித்தான். "எப்போ கட்டிக்கிடப்போறே?," என்றான் மாரியப்பன். "தெரியலிங்க...", என்றான் தங்கவேலு. மாரியப்பன் தங்கவேலுவின் அருகில் போய், "உனக்குச் சீக்கிரமே கட்டிக்கிட்டா நல்லதுதானே?...... உம்... அப்படிச் சொல்லு, கூடிய சீக்கிரம், என் செலவிலேயே அதை முடிச்சுடறேன்...," என்று கூறியதும, தங்கவேலு மாரியப்பனை நன்றியுடன் பார்த்தான். பிறகு தங்கத்தினிடம் ஓடி, அதைச் சொல்ல, தங்கம் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தாள்.

அன்று இரவு, தங்கவேலு மணி 11 ஆகியும் வீட்டுக்கு வராததுபற்றித் தங்கம் கவலையடைந்தாள். 11-30க்கு அவன் வந்ததும், "இனிமே சீக்கிரமே வீட்டுக்கு வந்திடுங்க...," என்று சொன்னாள். தங்கவேலு சிரித்துக்கொண்டே சாப்பிட்டான்; பிறகு தன் படுக்கையில் படுத்து, உறங்கி விட்டான். தங்கம், அவன் பக்கத்தில் படுத்திருந்தாள். அவளுக்கு அன்று ஏனோ உறக்கம் வரவில்லை; அவள் மனம், ஒரு காரணமுமின்றி வேதனைப் பட்டது. அதேசமயம் வாசற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டாள். 'இவ்

வளவு நேரத்துக்கப்புறம் யாரு கதவைத் தட்டுவா?'' என்று அவள் எண்ணியதும் அவள் உடல் பயத்தால், குலுங்கியது. ஒரு சமயம்.........?- அவள் சிந்தனை 'தட தட தட...', வென்ற சப்தத்தால் தடைபட்டது. மெல்ல நடந்து, கை விளக்கைச்சிறிது தூண்டினுள். பிறகு கதவினருகில் சென்று, ஒரு துவாரத்தின வழியாக வெளியே பார்த்தாள். மறு கணம், பதட்டத்துடன் பின் வாங்கினுள். வெளியில் முருகன், தன் கையில் கூரிய அரிவாளுடன் நின்று கொண்டிருப்பது, மங்கிய நில வொளியில் தெரிந்தது. அவள் என்ன செய்வாள்? கதவு மீண்டும் 'தட தட', வென்று தட்டப்பட்டது. தங்கம், தங்கவேலுவின் அருகில் ஓடி, அவனை மெதுவாக எழுப்பினுள்: "ஐயோ எழுந்திருங்களேன்..."

"என்ன தங்கம்?"

"அவன் வந்து விட்டான் ..."

"யாரு?"

"முருவன் - அந்தப் பாவி," என்ற மெதுவாக முணுமுணுத்தாள் தங்கம். தங்கவேலு பதறி எழுந்தான், அவன் மூளை குழம்பியது. தங்கம் ஒரு யோசனை சொன்னுள்; "விடு விடு"ன்னு ஓடிப்போயி, அவ்ஙை அழைச்சிட்டு வாங்க ... உம் ... போங்க..."

"தங்கம்... நீ சாக்கறதையா இருப்பியா? இதோ ஓடியாந்துடறேன், அவரை அழைச்சிட்டு ......?"

"உம்... போங்க, கொல்லை வழியா...;" என்று தங்கம் கூறியதும், தங்கவேலு மாரியப்பனை அழைக்க ஓடினுன்.

தங்கம், தன்னந்தனியாக நின்று கொண்டேயிருந்தாள். அவள் தன் இருதயத்தை அழுத்திப் பிடித்தபடி நின்ருள், முருகன் பல தடவை கதவைத் தட்டினுன். ஆனுல் அவள் திறக்கவேயில்லை

...............நேரம் சென்று கொண்டிருந்தது; தங்கவேலு இன்னும் திரும்பவேயில்லை. வாசற்கதவு 'தடார்', என்று பெயர்ந்து விழ, முருகன் வெறியுடன் அரிவாளைத் தூக்கியபடி உள்ளே ஓடிவந்தான். "எங்கே அவன? எங்கே அந்தப் பயல்? என் அரிவாளுக்குத் தப்பிச்சிட்டல்லாவா ஓடியாந்துட்டான்...," என்று தங்கவேலுவைத் தேடினுன். அவனைக் காணவில்லை.

"தங்கம்! உன்னையேதான்கட்டிக்கிடப் போறேன்... எங்கூட வந்திடு...," என்று அவன் கூறியதும் தங்கம், வெளியே ஓட முயற்சித்தாள். ஆனுல் அவன் அவளை இருகைகளாலும் தூக்கிக்கொண்டு, வயல், வாய்க்கால்களைத் தாண்டி ஓட ஆரம்பித்தான்; தங்கம் அலறினுள்.

குடிசையிலிருந்து பர்லாங்கு தூரத்திலிருந்த ஒரு திடலில் 'தொப்'பென்று தங்கத்துடன் விழ்ந்தான் முருகன். அவன் இதயம் இவ்வளவுநேரம் ஓடியதால் படபடத்தது; பெருமூச்சு வாங்கியது. அவன் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது. தங்கத்

ின் கையை இறுகப் பிடித்த படி "தங்கம்! என்னை நீ கட்டிக் கிறயா?" என்ருன்.

அவள் பேசவில்லை, கண்ணீர் வடித்த வண்ண மிருந்தாள். அவள் எண்ணமெல்லாம் தங்க வேலுவைப்பற்றியே இருந்தது. 'அவர் என்னைக்காணுமல் எப்படித் தவிப்பார்?......உயிரையே விட்டு விடுவாரே...ஐயோ...',— என்று ஏங்கினுள். பிறகு எழுந்து, முருகனின் காலைக் கட்டிக் கொண்டாள்: "என்னை விட்டுடுங்க"என்றுகெஞ்சினுள். முருகன்மனம் சிறிதும் தளரவேயில்லை. "எதுக்கு? அவனிடம் போவதற்கா?", என்று கூறி, ஏளனமாகச் சிரித்தான். "அவரா......? அவருதான்...," என்று கூறிய அவள் மேலே பேச முடியாமல் விம்மினுள். "மேலே சொல்லு......" என்று சீறினுன் முருகன். "அவரு இப்போ என் குடிசையிலே இல்லே" என்று கூறினுள் தங்கம். "பின்னே எங்கே?", என்று திடுக்கிட்டபடி கேட்டான் அவன். "நீங்க வாசல்லே நின்னதுமே, நீங்கதான்னு அவருக்குத் தெரிஞ்சு போச்சு. உடனே என்னிடம் ஓடியாந்து 'தங்கம் நான் எங்கேயாவது ஓடிடறேன் நீயே முருகனைக் கட்டிக்கிட்டு சுகமா இரு'ன்னு சொல்லிட்டு எங்கேயோ ஓடிட்டாரு,"என்று சொல்லி விம்மிவிம்மி அழுதாள் தங்கம். முருகனின் மனம் வேதனை அடைந்தது. 'நான் அவனிடம் விரோதம் பாராட்டினுலும் அவன் எவ்வளவு அன்பாக நடந்து கொண்டிருக்கிருன்', என்று எண்ணிய அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. "அவன் எங்கே போயிட்டான்?" என்று வெறி பிடித்தவன் போல் கேட்டான் முருகன். "கொஞ்சதூரம் தான் போயிருப்பாரு. இப்ப ஓடிஞப் புடிச்சுடலாம்' என்று தங்கம் கூறியதும், முருகன் ஓடினுன். தங்கம் அவனைப் பின்தொடர்ந்தாள். அவள் கூறிய 'பொய்' பொருத்தமாகி விட்டதே என்று எண்ணிய அவளுக்கு உண்டான மகிழ்ச்சி எல்லை கடந்தது!

தங்கவேலு மாரியப்பனுடன் அப்போதுதான் குடிசையை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். அவன் எதிரே ஓடின முருகன், தங்கவேலுவின் காலைப் பிடித்துக் கெஞ்சினுன்: "என்னை நீ மன்னித்துவிடு..." தங்கவேலு ஒன்றும் புரியாமல் நின்றுவிட்டான். பிறகு தங்கம் நடந்தவற்றைக் கூறியதும், அவனையறியாமல் அவன் உதடுகள் தங்கத்தைப்பார்த்து "நீ கெட்டிக்காரி;"என்று முணுமுணுத்தன. முருகன் தங்கவேலுவைப் பார்த்து "அண்ணே! இன்னும் இங்கேயா இருக்கணும்? நம்ப ஊருக்கே வந்திடுங்களேன்!" என்று கூறினுன். தங்கவேலு "சரி", என்று கூறியதும் முருகன், முகத்தில் மகிழ்ச்சி தங்கியது. ●

மொழிப் போர் வெல்க!



பாரதிதாசன் பரம்பரை

[ரங்க துரைவேலன் பர்மாவில் பிறந்த தமிழர். பர்மா அரசாங்கப் பணியாற்றும் இவர் தமிழில் அளவு கடந்த ஆர்வமுடையவர்; பல ஏடுகளிலே இவர் பாடல்கள் வெளிவந்துள்ளன—ஆசிரியர்]

கவலை இல்லை

ஆணழகே உமதினிய முடங்கல் கண்டே
ஆடிற்றும் என்னுள்ளம் அன்பால் நீங்கள்
பேணுகின்ற நற்காதல் இலக்கியத்தைப்
பெய்திருப்பீர் என்றெண்ணிப் பூரித்தேன் ஆனால்,
கோணலுற்ற சமூகமெனும் குள்ள வாத்தின்
கூவலினை முடங்கலிலே காட்டி விட்டீர்!
நாணிற்றும் என்னுள்ளம்! நமது நட்பை
நாடேற்க வில்லைஎனில் கவலை யில்லை!

காதலினை ஈருயிரின் இணைப்பு தன்னைக்
கட்டாரி யால்வெட்டத் துணிந்து விட்டார்.
சாதல்எனும் நிலைவரினும் அஞ்ச மாட்டோம்
சாவதிலும் காதலராய்ச் சாவோம் என்று
சோதனைக்கு விடநினைத்தீர். உலகில் காதல்
தோற்றதனால் உயிர்விட்ட காதல் வீரர்
காதைபல கோடிகண்டும் கருணை காட்டாக்
கல் நெஞ்சர் மனம்பற்றிக் கவலை யில்லை!

கணைதொடுத்துக் காதலினை விழ்த்து கின்ற
கல்லுளியாம் சமூகத்தின் உறவு நாடி
இணைந்தஉள்ளக் கட்டுதனை வெட்டு கின்ற
இரும்பு நெஞ்சப் பெற்றோரின் மடமை தன்னை,
துணைநிற்கும் சமூகத்தைத் தூள்தூ ளாக்கும்
துணைத்தோள்கள் இரண்டுண்டே, அவற்றால் என்னை
அணைத்தின்பம் கண்டமறு கணமே இந்த
ஆருயிரே போமெனினும் கவலை யில்லை!

★ தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் கரந்தைத் தமிழ்ச் சங்க வடிவில் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். கலை நூல்கள் தமிழில் பெருக வேண்டும் என்ற அவர் தம் எண்ணமும் எண்ணினால் வழியுண்டு என்பதற்கு அவர் தரும் விளக்கமும் பின் வரும் கட்டுரையில் காணலாம். பதினான்கு ஆண்டு கட்குமுன் நிகழ்ந்த சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் உமாமகேசுவரனார் ஆற்றிய தலைமையுரையினின்றும் இக்கட்டுரை தொகுக்கப்பட்டது. ★

தமிழில் முடியும்

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார்

கலைநூல்கள் தமிழில் எழுதப் பெறாதது பெருங்குறையென எல்லோராலும் கருதப்பெறுகிறது. கலைநூல்களைத் தேடுவோரில்லாதபடியால் அவை வெளிவரவில்லை என்பார் ஒரு சாரார். நூலில்லாமையால் பயில்வோரில்லை என்பர் மற்றொரு சாரார். தமிழில் எழுதப்பெறும் கலைநூல்களுக்கு உண்மையான தேவை நாட்டில் இருந்தால், நூல்கள் ஒன்று பலவாகத் தோன்றிவிடுமென்பது எனது நம்பிக்கை. இது எவ்வாறாயினும், கலைநூல்களை எழுதுவதற்கு ஏற்ற முறை யாது என்பதுபற்றிப் பெரியதோர் ஆராய்ச்சி நிகழ்ந்து வருகின்றது. கலைநூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் படைப்பது எவ்வாறு? ஆங்கிலமாதிய மேனாட்டு நூல்களில் வழங்கும் சொற்களையே எடுத்துக்கொள்ளுவதா, வடசொற்களால் படைத்துக்கொள்ளுவதா, அல்லது தமிழ்ச்சொற்களால் ஆக்கிக்கொள்ளுவதா என்பதுபற்றி அறிஞர்கள் கலாம் நிகழ்த்துகின்றனர். ஏற்ற தமிழ்ச் சொற்கள் நூலிலோ வழக்கிலோ கிடைக்குமெனின் அவற்றைப் பயன்படுத்தவேண்டும்; இல்லாதவழி தமிழில் படைத்துக் கோடல் வேண்டும்; இதுவும் முடியாவிடில் பிறமொழிக் குறியீட்டுச் சொற்களைத் தமிழ்மரபிற் கேற்பத் திரித்து அமைத்துக்கோடல் வேண்டும். இதுவே பண்டையோர் கொண்ட முறை. பழைய இலக்கியங்களில் பயிலும் வடசொற்களும், திசைச்சொற்களும பெரும்பான்மையாகத் தற்சம, தற்பவ மொழிகளாய்த் தமிழ் எழுத்தால் எழுதப்படுதலும், தமிழ்ச்சொற்களையே இணைத்து வேற்றுமொழிச் சொல்லின் பொருளைத்தருமாறு படைத்துக்கொள்ளுதலும் வழக்கமாயிருந்து வந்திருக்கின்றன. பிறமொழியாளர்கள் கையாளும் முறைகளும் இவையேயாகும். 'சாம்புநதம்'

என்பதை 'நாவலம் பெயரிய பொலம்' என வழங்கினர். (நாவாய்) என்ற தமிழ் மொழியை Navy என யவனர் திரித்துக்கொண்டனர். இது போலவே ஆங்கிலேயரும், அரிசி, இஞ்சி என்பவற்றை rice, ginger என ஆக்கிக் கொண்டனர். கலைநூல்களிற்காணும் நுண்பொருள்களையும், கருவிகளையும் உணர்த்துதற்கு நாளதோறும் புதிதுபுதிதாகச் சொற்கள் மேனாட்டினரால் படைக்கப்படுகின்றன. இச்சொற்களை நுனித்து ஆய்ந்தால், தாம் சுட்டும பொருளை விளக்கும் சொற்கள் மிகச்சில; அச்சொற்களில் பல, அவை உணர்த்தும பொருளைக்கண்ட அறிஞரின் பெயராலாதல், இடுகுறிப்பெயராலாதல் ஆக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இங்ஙனம ஆக்கப்பெறும் சொற்களை ஒரு மொழியினரும் பிறிதோர் மொழியில் வழங்குங்கால் தத்தம் மொழிக்குரிய எழுத்துக்களில் திரித்து எழுதிக்கொள்ளுதலும், சொற்பொருள் விளங்குமாறு தம் மொழியில் சொற்கள் படைத்துக்கொள்ளுதலும் மேனாட்டினர் கொள்ளும் முறைகளாம். சர்மனி நாட்டினர் கலைத்திறன் மிக்க நாடுகளில் முதலிடம் பெற்றுத் திகழ்பவர் என்பதை எவரும் மறுக்கத் துணியார். அறிவுநூற் பொருள்களைக் குறிப்பதற்கான சொற்களைப் பொருள் விளங்குமாறு சர்மனியர் தம் மொழியால் ஆக்கிக்கொள்ளுகின்றனர். அவர்கள் மொழிவளமேனும் கலைத்திறமேனும் குன்றினதில்லை. இச்சிறிய முறையை ஏன் தமிழர் கொள்ளக்கூடாது? கலைநூல்களிற் காணும் நுண்பொருள்களைக் குறிப்பதற்குத் தமிழில் சொல்லாற்றலும் சொல்வளனும் இல்லை என்பார், தமது அறியாமையை மொழியின் மேலேற்றி ஏதம் புரிபவர் எனவிடுக்க. தருக்க நூல், அணி இலக்கணம், யோக நூல், ஞான நூல் முதலியவற்றில் வடசொற்கள் பலவற்றைத் தமிழில் செவ்வனே மொழிபெயர்த்திருக்கக் காணலாம்; பல வடசொற்களைத் தமிழ்ச் சொற்களாகத் திருத்தி அமைத்திருக்கவுங்காணலாம். இற்றை நாளிலோ, ஆங்கிலத் துறையில் கற்றுத்தேர்ந்த பட்டதாரிகள் பள்ளிச்சிறுர்கள் பயிலுதற் பொருட்டு, மேனாட்டுக் கலைகளைப் பாடப் புத்தகங்களாகத் தமிழில் எழுதி வெளியிடுகின்றனர். இந்நூலாசிரியர்களிற் பெரும்பாலர் தமிழ் நூற் பயிற்சி மிகமிகக் குறைந்தவர்; தமதுள்ளக்கருத்தைத் தெள்ளிதிற் கூற வாயில்லாது விழிப்பவர்; பொருள் விளக்கமற்ற, வாய்வழங்காத, சில வடசொற்களைக் கரடுமுரடாக முடைந்து குறியிட்டுச் சொற்களெனக் கருதித் தாம் எழுதும் கலைநூல்களில் அவற்றைப் பெய்து வெளியிடுகின்றனர். மாணவர்க்கும், ஆசிரியர்க்கும் இந்நூல்கள் விளைத்துவரும் ஏதங்கள் மிகப்பல. தமிழறிவு நிரம்பாத ஆசிரியர்கள் எழுதும் கலைநூல்களாலும், பள்ளிப் படிப்பினாலும் கலைவளர்ச்சி பெருகு மென்றும், நாட்டுமொழி வளம்பெறுமென்றும் நினைப்பது பேதைமையாகும். இம்மட்டோ! தமிழ் மொழியை வளப்படுத்தும் கருத்துடன், கலைநூல்களிற்காணும் நுண்பொருள்களைக் கூற, தமிழறிவு இல்லாத கலைவாணரின் உதவி கொண்டு அரசியலார் வெளியிட்டிருக்கும் குறியிட்டுச்சொற்

களின அட்டவணைகள பல்லாற்றானும் பிழை மலிந்திருத்தலால் தமிழ் நாட்டின் நன்மதிப்பை இழந்து வழக்கற்றிருக்கின்றன. வடமொழியாளரும், அரசியலாரும் படைத்திருக்கும் குறியீட்டுச் சொற்கள உலகர் அனைவருக்கும் பொருள் விளங்குமாறு அமைக்கப் பெற்றிருப்பதாகக் கருதலாகுமா? தமிழ்ச் சொற்களால் குறியீட்டு மொழிகளை ஆக்கிக்கொள்ளுவதால் விளையுங் கேடு தான் என்னை? திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் மிகச்சிறந்த முறையில் கலைப் பொருள்களுக்கு ஏற்ற குறியீட்டுச் சொற்களைத் தமிழில் ஆக்கினரன்றே? திருவாளர் மறைமலையடிகள், திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L., திருவாளர் A. சீனிவாசாச்சாரியார் அவர்கள் B. A., L. T., திருவாளர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் முதலாயினோர் விழுமிய நடையில் எழுதிவரும் உரை நூல்களையும். அன்னோர் புதுக்கருத்துக்களை மிகஎளிதாகத் தமிழில் எழுதுவதையும் கண்டும், தமிழ்மொழி வளங்குன்றியதெனப் பழிதூற்றும் வன்கண்ணர்களின் அறியாமைக்கு மிகவும் இரங்குகின்றோம்.

பள்ளியிற் பயில்வோர், ஆங்கிலமொழிந்த ஏனைய பாடங்களைத் தமிழில் கற்றுத்தேர்வது நாட்டிற்கும் நமக்கும் நலம் பயக்குமென்ற கொள்கை நாளடைவில் நிலைபெற்றுவருகிறது. பள்ளியிறுதித் தேர்விலுங்கூட கலை நூற்பொருள் பற்றிய வினாக்களுக்குத் தமிழில் விடை பகரலாமெனும் உரிமை வழங்கப்பெற்றுமிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே, கலைநூற்பயிற்சி தமிழில் நடப்பதே தமது முடிந்த நோக்கமென்று நடுத்தரத் தேர்வு (*Intermediate*)க்கான தருக்க நூலொன்றும், பிறநூல்களும தமிழில் இயற்றத் தொடங்கி இருக்கின்றனர். என்றாலும், கல்லூரித் தலைவர்கட்கும, பல்கலைக்கழகத் தலைவர்கட்கும், கல்வித்துறைகளை ஆட்சிபுரியும் அரசியற்றலைவர்கட்கும், கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் இக்கொள்கையில் முழு நம்பிக்கையில்லை; உறுதியில்லை ஊக்கமுமில்லை; தமிழிற் கற்பிக்கும் ஆற்றலுமில்லை. இன்ன பல காரணங்களால் தாய்மொழியில் கல்வியைக் கற்பித்தல் என்பது பேச்சளவில் இருக்கிறது. இன்னும் ஆட்சியில் வரவில்லை. தன்குற்றங் காணமாட்டாத ஆசிரியர், புதுவதான கலைப்பொருளைத் தமிழில் மொழிவதற்குச் சொல்வளமில்லையெனவும, கலைநூல்கள் எழுதுவாரில்லையெனவும் பொய்க்கரிகூறி வீணே காலங் கழிக்கின்றனர். இப்பொருள் பற்றி, உசுமானிப் பல்கலைக்கழகப் பேரவையில் நவாபு மாடியார் சங்கு பகதூர் அவர்கள் M. A., 8—2—1934-யில் நிகழ்த்திய பேருரையைத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பல்காலும் படித்துத் தெளிவுறுவாராக. அப்பொன்னுரையின் சுருக்கம் வருமாறு:

“எங்கள் மொழித்திறனில் முழு நம்பிக்கை வைத்தோம். புதுக்கலைகளின் கருத்தை உணர்த்த அயல்நாட்டு மொழியே இன்றியமையாத கருவியென்றும், தாய்மொழி இதற்கு ஏலாத

கருவி என்றும் கொண்டிருந்த பழங்கொள்கையால் இந்தியர்கள் பழிக்கு ஆளானதுமன்றிக் கீழ்நிலையும் எய்தினர் எனக் கண்டோம். வேற்றுமொழியைக் கற்றுப் புலமை பெறவும, அதன் வாயிலாய்க் கலையறிவு பெறவும நாம் மேற்கொள்ளும் முயற்சிகளால் இக்கொள்கைக்கு அடிமை ஆகிறோம் என்பதை நன்கு உணர்ந்தோம். வேற்றுமொழியாலன்றிக் கலையறிவும், உயர்நிலையும் எய்தவொண்ணாது என்ற அடிமை எண்ணத்தினால் நுண்மதிமழுங்கி, ஆயுந்திறனழிந்து, பாடப்புத்தகங்களை உருவேற்றி ஒப்புவிக்கும் கருவிகளாயினோம் எனத் தெளிந்தோம். தாய்மொழி தாழ்ந்த தரத்தது, கலைக்கருத்துக்களைத் தன்னகப்படுத்தவோ பிறர் உணருமாறு கூறவோ முடியாதது என்ற எண்ணங்கள் மனிதனின் ஆய்புலத்தையும; தன் முயற்சியையும் மழுங்கச்செய்யும் மனநிலையை விளைத்துவிட்டன. தாய்மொழி இழிதகவுடைத்தென மறுக்கத் துணிந்தவர் சென்ற ஒரு நூற்றுண்டாக வெளிவரவில்லை, இந்திய மக்கள் கல்வியில் தேர்ச்சியடைதற்கு ஆங்கிலமே ஏற்ற கருவியென மக்காலே துரைமகனார் அறிக்கை விடுத்த காலந்தொட்டு, அனைவர்க்கும தாய்மொழியில் நம்பிக்கை ஒழிந்துவிட்டது. எமது தாய்மொழியில் கல்வி வழங்குவம எனப் பல்கலைக்கழகம் கூறிய ஞான்று பல்வகைத்தான எதிர்ப்புகள் இங்குத்தோன்றின. சிசுக்கொலை புரிவோர் சிலர் கழகத்தின் கழுத்தை உடனே முறித்துவிட எண்ணினர்; சிலர் சொல்வளம் நிரம்பாத இந்துத்தானி மொழி, புதுக்கருத்துக்களைக் கூறமுடியாது தடுமாற்றமுறுமெனவும், அம்மொழியைக் கருவியாகக் கொண்டு கற்பிக்க முயலும் கலைக் கழகமும் உருப்படாது மாய்ந்தொழியுமெனவும் கூறினர்; மற்றும் சிலர் ஆங்கில நாட்டிலுள்ள கலைக்கழகங்களின் நன்மதிப்பைப் பெற மாட்டாதென நினைத்தனர்; யானோ, இக்கலைக்கழகத்தாரின் புதுக்கொள்கையில் முழு நம்பிக்கை வைத்தவன்; கழகந் தொடங்கியவர்களின் மதிநுட்பத்தை மிகவும் மெச்சினேன்; துணிபுடன் செயல் புரிந்ததை மகிழ்ச்சியுடன் பாராட்டினேன் தாய்மொழிப் பயிற்சியில் தமக்குள்ள குறைவினை உணரி, சொல்லாற்றல் இல்லையே எனக் கணக்காயர் முதலில் மயங்கினர். இதுபோது கழகந் தொடங்கிப் பத்து ஆண்டுகள ஆயின. இந்துத்தானி மொழி புதுத் தேவைகளுக்கேற்றவாறு விளங்குவதையும், கலைநூற்பொருள்களை எளிதே கூறுதற்கு ஏற்ற கருவியாய் இருப்பதையும், உள்ளக்கருத்துக்களை முட்டின்றி மொழிவதற்குத் தம் சொல்வளம் பல்கியதையும அக்கணக்காயரே கண்டு இன்புறுகின்றனர். இலக்கியங்களும், கணிதமாகிய கலைகளும் இயல்பிலே வந்த தாய் மொழியில் இசைவுடன் அமைந்துவிட்டன. சுருங்கக் கூறின், கழகந்தோன்றிய காலத்தே பலர் உள்ளத்தும் விளைந்த ஐயப்பாடுகள் யாவும அகன்றொழிந்தன. புதுக்கலைகள் எல்லாம் மிக எளிதில் தாய்மொழியிலே கற்பிக்கப்படுகின்றன. இக்கழகத்தே தேர்ச்சி பெறுபவர் இந்தியா

வீலும் இங்கிலாந்திலும உள்ள கலைக்கழகங்களின் தேர்வுகட்கு எவ்வாற்றானும் தாழவில்லை யென மதிக்கப்பெறுகின்றன. நீதிக்கலை, மருத்துவக்கலை, சிற்பக்கலை, உழவுக்கலை ஆகிய தொழிற்கலைக் கல்லூரிகளும் சீரிய முறையில் வளர்க்கப் பெறுகின்றன."

செயற்கரிய கருமமெனத் தமிழர் கருதும் செயல்களை, உஸ்மானியக் கலைக்கழகத்தினர் பத்தாண்டுகளில் மிக எளிதில் இயற்றியதன்பொருட்டென்னை? உண்மையான மொழிப்பற்றும் தன்னம்பிக்கையும், எண்ணிய கருமத்தை எவ்வாற்றானும் இயற்றுவேமெனும் மனத்திண்மையுமல்லவா? தமிழன்பர் என மகுடமிட்டுக் கொள்பவரிடத்து இத்தகைய பெற்றிமைகள் காணப்படுகின்றனவா? இவர் மாட்டுத் தன்னம்பிக்கையில்லை; தாய்மொழியின் எழில் நலங்களையும், சொற்சுவை, பொருட்சுவைகளையும் காண்பதற்குரிய தமிழறிவில்லை: ஆதலால் புதுக்கருத்துக்களைப் பேசுதற்குச் சொல்லில்லையெனவும், எழுதுதற்கு எழுத்தில்லையெனவும் பழிதூற்றி அயல்மொழிகட்கு அடிமைகளாயிருக்கின்றனர்.

தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலக் கல்லூரிகள் எத்தனை, வடமொழிக் கல்லூரிகள் எத்தனை, வளமுற விளங்குகின்றன! இது காலை அரசியற் பித்தினுல் இந்தி மொழியும் இந்திப் பிரசாரகரும் தமிழ் நாட்டில் பெற்றிருக்கும் ஆக்கத்தின் பொருட்டு என்னை? பிறமொழிகள் வளர்தற்கும், தமிழ் மொழி வாடுதற்கும் காரணமாவது தமிழரின் முயற்சியின்மையே யாகும். அரசியலாரையும், நாட்டின் தலைவர்களையும், மடங்களின் தலைவர்களையும், பெருஞ் செல்வரையும் பழிதூற்றுவதில் பயனில்லை.

'உழப்பின் வாரா வுறுதிகளுளவோ
கழப்பின் வாராக் கையுறவுளவோ.'

என்ற பொய்யா மொழியினைக் கடைப்பிடித்துத் தமிழறிஞர் ஊக்கத்துடன் முயலவேண்டும்.

தமிழ்நாட்டின் நிலை பல்லாற்றானும தளர்வுற்றிருக்கின்றது. நூற்றுக்கணக்கான ஆங்கிலக் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக் கழகங்களும் தமிழ் நாட்டின் எல்லைக்குள் இருந்தும தமிழரிற் பெரும்பாலர் கல்லாமாக்களெனக் கருதப்படுகின்றனர். ஆங்கிலக் கல்லூரிகளிலிருந்து கற்றுத் தேறி வெளிவருபவர் புதுக்கொள்கைகட்கு அடிப்பட்டு, பிறர்மாட்டு அன்பும் அருளும் கொண்டு தொண்டு புரியுமாறறியாத ஊமராய்த் தனிச்சாதியினராயிருக்கின்றனர். அறியாமை அகலவும், நாடு நலஞ்சிறக்கவும் தமிழ்க்கல்வியே சிறந்த கருவி. தமிழ் மொழியின் ஆக்கம் பெருகுதற்குரிய வழிகளை நாடித் தமிழறிஞர் நாட்டைப் புரப்பாராக.

நம்முடைய பார்ப்பனரின் ஆயுதங்கள்
இந்தி, வட சொல் இரண்டும்

— தமிழியக்கம்

உருது இலக்கியம்

கா. அப்பாத்துரை

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

புகழ்ப்பாவிலும் வசைப்பாவிலும் ஸௌதாவுடன் ஒப்பான பெருமையுடைய மீர்தக்கி உணர்ச்சிப் பாடல்கள் (கஜல்) பரிவுப்பாடல் (மஸ்னவி) ஆகிய துறைகளில் அவரைவிட மேம்பட்டவர் ஆவர். இவர் உருது மொழியில் எண்ணற்ற நூல்களை எழுதிக் குவித்தார். மீர்தர்த் என்ற மற்றொரு புலவர் இளமையில் படை வீரராயிருந்து பின் இஸ்லாமிய மறைஞானக் கட்சி (சூபி)யில் சார்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்களும் அடியவர்களும் கொண்டு அதன் ஒரு பிரிவின் தலைவரானார். இவர் பாரசிக மொழியிலேயே சூபிக் கருத்துக்கள் பற்றிய பல நூல்கள் இயற்றினாராயினும் உருதுவிலும் எளிய இனிய நடையில் ஒரு காப்பியம் எழுதிப் புகழ் படைத்தார்.

லக்னோ இலக்கியம்

நாதர்ஷா, அகமதுஷா, அப்துராணி ஆகியவர்கள் படையெடுப்புக்களால் தில்லி நகர் அரசவாழ்வு சீர்குலைவுற்றது. ஆர்ஜூ, ஸௌதா, மீர்தகி ஆகிய புலவர்கள் ஒவ்வொருவராகத் தில்லி நகரிலிருந்து வெளியேறி பைஜாபாத், லக்னோ முதலிய நகரங்களுக்குச் சென்றனர். லக்னோவில் இப்புலவர்கள் தம் துயர் நீக்கும் வள்ளல் ஒருவரை அடைந்து அங்கே வாழலாயினர். இவ்வள்ளலே நவாப் அஷப் உத்தௌலா ஆவர். தமிழ்நாட்டில் தமிழ்ப் புலவர்களுக்கு அரசியல் ஆதரவு குன்றிய காலத்தில் அவர்களை ஆதரித்த சீதக்காதி மரக்காயரே போல், இவரும் உருது இலக்கிய வாழ்வுமீது புயல் வீசிய காலையில் அதற்கு உறுதுணையாய் நின்று அதனை ஆதரித்தார்.

லக்னோவில் வளர்ந்த பெரும் புலவர்கள் மீர் ஹஸன், ஸோஸ், ஜுர்ஆத், மிஸ்கின், ஆதாஷி, நாசிக் முதலியவர்கள் ஆவர். இவர்களுள் தலைசிறந்தவர் மீர் ஹஸன். ஸௌதா, மீர்தகி, மீர்ஹஸன் ஆகிய மூவரும் ஒரே நிலையில் வைத்து உருதுக் கவிதையின் மும்மணிகள் எனப்படுகின்றனர். இவர் கைவண்மை மிக்க கவிதைத் துறை காதை (மஸ்னவி) ஆகும். பேநஜிர் என்ற இளவரசன், பத்ரீமுனிர் என்ற இளவரசி ஆகியவர்கள் இனிய காதற்கதை கூறும் நூலாகிய 'ஸிஃருல் பயான்' என்பதும் 'குல்வாரி ஈராம்' என்பதும்

இத்துறையில் இவர் சிறந்த நூல்கள் ஆகும்.

பெண்கள் உலகு, பெண்கள் பேச்சு நடை ஆகியவற்றைத் தனிப்படச் சித்தரித்துச் சிறப்படைந்த புலவர் ஸோஸ். இவர் பெண்கள பேச்சு வழக்கை ஒரு மொழியாக்கி அதற்கு ரேக்தாவின் பெண்பால் சொல்லான ரேக்தி என்ற பெயர் வழங்க வைத்தவர். 'ஜுரெர் அத்' தும் இதே வழக்கைப் பின்பற்றியவர். இவர் சிலேடை (இருபொருள் சொல் வழக்கு) அணியை மிகுதி வழங்கினர். மிஸ்கீனும், மீர்ஆனிஸ், தாபிர் ஆகியவர்களும் பரிவுப் பாடல்களிலும் ஆதாஷ், நாஸிக் ஆகியவர்கள் உணர்ச்சிப் பாடல்களிலும் வல்லவர்கள். ஸரூர் எதுகை நயம்பட உரைநடையில் ஒரு காப்பியம் இயற்றினர். வஜீத் அலி 'அக்தார்' அவதி என்ற அயோத்திப்பேச்சுநடையில் மூன்று காப்பியங்கள் எழுதியுள்ளார். இது உலகநடையாதலால் மொழி நூலாராய்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவது.

பிற்காலத் தில்லி இலக்கியம்

நாதர்ஷா படையெடுப்பின்பின் முகல் பேரரசர் பெயரளவிலேயே பேரரசராயிருந்தனர். ஆனல் அரசியல் புகழ்குறைந்தாலும் அவர்கள் கலைப்புகழ் ஓங்கிவளரவேசெய்தது. இரண்டாம் ஷா ஆலம் (1761—1806) 'ஆஃப்தாவ்' என்ற கவிதைப் புனைபெயருடன் பா நூல்கள் எழுதியதுடன் இலக்கிய இயக்கத்தை மீட்டும் தொடங்கினர். மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் பண்டைப் பாண்டியர் புலவர்களைக் கூட்டி இலக்கியக் கழகம் அமைத்தது போல் அவரும் உருதுக் கவிஞர் மாநாடு ஒன்று நடாத்திய கழகமமைத்தார். அவருக்கடுத்த முகலரசர் இரண்டாம் பகதூர்ஷாவே கடைசி முகல் அரசர். இவர் பிரிட்டிஷாரால் அரசிருக்கையிலிருந்து விலக்கப்பட்டு இரங்கூனில் சிறை வைக்கப்பட்டார்; இவ்வரசர் பெருமான் 'ஸபர்' என்ற புனைபெயருடன் தம் துயர வாழ்க்கையைப் பற்றிக் கவிதையும் நூலும் இயற்றினர். அவர் நண்பர்களான 'காய'மும் 'காலி'புமே தில்லியின் இறுதிப் புலவர்கள். இவர்களுக்குப்பின் கவிதை இலக்கிய காலம் ஓய்ந்து விட்டது என்னலாம். உருது இலக்கியத்திற்கு அரசர், சிற்றரசர் ஆதரவும் கிட்டத்தட்ட இத்துடன் முடிவடைந்ததென்றே கூறவேண்டும், ஏனெனில் 19-20ம் நூற்றுண்டுகளில் அவ்வகையில் மீந்துள்ள ஒரே அரசர் ஹைதராபாத் நைஜாமேயாவார்.

கல்கத்தாவும் உரைநடை இலக்கியமும் (19-ம் நூற்றுண்டு)

கிட்டத்தட்ட 1800-ம் ஆண்டில் ஐரோப்பியர்களுக்கு இந்தியத் தாய்மொழிப் பயிற்சி தருவதற்காக வில்லியம் கோட்டைக் கல்லூரி திறக்கப்பட்பட்டது. கல்லூரித் தலைவரான டாக்டர் கில்கிரைஸ்ட் நாட்டு மொழிகளின் இலக்கியப் புலவர்கள் அனைவரையும் திரட்டிக் கல்விப் பயிற்சிக்கான புது நூல்கள் இயற்றுவிக்க ஏற்பாடு செய்தார்.

1800 வரை இந்துஸ்தானி கவிதை இலக்கியம் உருது இலக்கியமாக மட்டுமே இருந்தது. உருதுவல்லாத இலக்கியம் அவ்வத்தாய் நிலமொழியிலோ அவ்வவ்விடத்து இலக்கிய மொழியிலோ எழுதப்பட்டது. இந்நிலையில் புதிதாக உரைநடை இலக்கியமமைக்கப் புகுபவர் அந்நாளைய உருதுவை வழங்குவதே இயல்பாக நடந்திருக்கக் கூடிய செய்தி. ஆனால் கில்கிரைஸ்ட் உரைநடையில் இந்துக்கள் மனத்தைக் கவரத்தக்க ஒரு இந்து இந்துஸ்தானி அல்லது உயர் இந்தியையும முஸ்லிம்கள் மனத்தைக் கவர்வதற்காக ஒரு உயர் உருதுவையும் உண்டு பண்ணினார். பழய உருது அல்லது இந்துஸ்தானியிலுள்ள பாரசிக அராபியச் சொற்களைக் கூடிய மட்டும் நீக்கித் தூய வடமொழி (தத்சம)ச் சொற்களையும் வடமொழி மரபுகளையும் சேர்த்துப் பெருவாரியாகச் சேர்த்து உயர் இந்தி அமைக்கப்பட்டது. பழய உருதுவில் உள்ள நாட்டு மொழிச் சொற்களைக்கூடக் குறைத்துத் தூயபாரசிக அரபியச் சொற்களையும் முன்னிலும் மிகுதியான பாரசிக மரபுகளையும் சேர்த்து உயர் உருது உரை நடையாக்கப்பட்டது.

கல்கத்தாப் புலவர்களில் லல்லுலால் உயர் இந்தி இலக்கியம் படைத்தவர். லாகூர் நிஹால் சந்த் பெரும்பாலும் உருதுவே எழுதிய முஸ்லிமல்லாதார். இவரே பாரசிகக் காவியமாகிய 'குல்-ஈ-பகால்வி'யை 'மஸ்ஹப்-ஈ-இஸ்க்' என்ற பெயருடன் உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாக உருதுவில் எழுதியவர். கல்கத்தா எழுத்தாளருள் உரை நடை ஆற்றலில் சிறந்தவர் 'அஃப்ஸோஸ்'. இவர் எழுதிய சிறந்த உரை நடை நூல் 'ஆரைஷிமஃபில்' என்பது. இது இந்தியா பற்றிப் பாரசிகத்தில் எழுதப்பட்ட ஒரு நூலின் மொழிப்பெயர்ப்பு. ஹைதரி ஆரைஷிமஃபில் என்ற பெயரையே கொண்ட புனைகாவியமும் பேர்போன 'தோதாகஹானி'யின் உரை நடைப்பகர்ப்பு ஒன்றும் இயற்றினார். இவர்களன்றி பேராசிரியர் ஹஃபீஸ், மீர்அமமன், இலா, இக்ராம் அலி ஆகியவர்கள் இக்காலப் பெரும் புலவர் ஆவர்.

திருந்திய திருமணம்

சிக்கல் எஸ். சண்முகம் அவர்கள் இல்லத்தில் திருமிகு இராமையா — மீனாட்சி திருமணம் கீவளூர்த் தோழர் ராஜன் அவர்கள் தலைமையில் 8–7–48 முற்பகல் 10-மணிக்குச் சிறப்புற நிகழ்ந்தது. தோழர்கள் முத்து கிருஷ்ணன், நாகப்பன், 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினார்கள்.

தற்கால உருது இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியமுஸ்லிம்களின் சமய, அரசியல், வாழ்வியல் கலைத்துறைகளில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. வெற்றிக்குப் பேரளவு காரணமாயிருந்த பெரியார், இஸ்லாமிய உலகின் பிற்போக்குக் கண்டு கொதித்தெழுந்து பல துறைகளில் சீர்திருத்த இயக்கங்களைத் தோற்

றுவித்த ஸர் ஸையத் அகமத் கான் ஆவர். இவரது இயக்கம் வாஹாபி இயக்கம் எனப்படும். இதனை ஆதரித்தும் எதிர்த்தும பல இறப்பட்ட இயக்க அலைகள் எழுந்தன. ஆதரித்த பெரும் புலவருள் ஒருவர் மௌலானா அத்லாஃப் ஹுஸைன் 'ஹாலி' ஆவர். இவர் உருதுக் கவிதையிலும் நடையிலும் பெரிய புரட்சி உண்டு பண்ணினார். எளிய நடை பயின்றார். பிற உருதுக் கவிஞர்கள் போல் பாரசிக இலக்கிய உவமைகளை இந்தியக் கவிதையில் பன்லிப் பன்லிக் கூறாமல் நேரடியாக இந்திய இயற்கைக் காட்சிகள், சூழ்நிலைகள் ஆகியவற்றை விரித்துரைத்தார். உருதுவில் 6 அடி கொண்ட புதியதோர் பாவினம் (முஸத்தஸ்) யாத்து அதில் 'இஸ்லாமின் வளர்ச்சியும் தளர்ச்சியும்' என்ற அழகிய நூல் இயற்றினார். ஸர் ஸையத் அகமத் கானின் வாழ்க்கையையும் இவர் திறம்பட எழுதியுள்ளார்.

உருதுவின் அண்மைக் காலப் பெருங்கவிஞர் ஸர். மகமது இக்பால் ஆவர் (1880-1938). இவர் பாரசிகம், உருது ஆகியவற்றில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதியவர், இஸ்லாமிய உலகநாகரிகத்தின் சிறப்பை இந்தியாவுக்கும் உலகுக்கும் அறிவிக்க அரும்பாடு பட்டவர் இவரே. இவர் இயற்கை விரிவுரை, வாழ்க்கை ஒளியம் ஆகிய துறைகளில் உலகக் கவிஞர்களுடன் வைத்து எண்ணத்தக்கவர். தற்கால வட இந்திய இலக்கியங்களுள் வங்கக் கவிஞரான தாகூருடனொத்த பெருங்கவிஞர் இவரொருவரே.

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த உரைநடையாசிரியர் மௌலானா முகமத் ஹுஸைன் ஆஜாத் ஆவர். இவர் லாகூர் அரசியல் கல்லூரி அராபிப் பேராசிரியர். இவர் எழுதிய 'உருதுப் புலவர் வரலாறும் மதிப்புரையும்' என்ற நூல் அறிஞர் உலகின் அச்சாணியாயுள்ளது.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை வாழ்ந்த இன்னொரு கவிஞர் மீர்ஜா கான் தாக் ஆவர். இவர் இனிமையும் நளினமும் உடைய பாவியல் நடையுடையவர்.

முடிவுரை

உரைநடை மொழியில் கவிதை

உருது, உரைநடை, இரண்டினுக்கிடையேயும் வேறுமை மிகுதி இல்லை. இவ்வகையில் இந்தி உருதுவுடனும் மற்றெம மொழியுடனும் மாறுபட்டு விட்டது. உரை நடை வடமொழி கலந்த இந்துஸ்தானியிலும் கவிதை அவ்வுரை நடை இந்தியில் ஒருபாலும் பழய பல்வேறுபட்ட இலக்கிய மொழிகளிலும் ஒருபாலுமாகச் சிதறி இயல்கின்றது. ஆயினும் பேச்சு நடை இலக்கிய நடை ஆகியவை இரண்டும இருவேறுபட்டுள்ள தன்மையில் உருதுவும் இந்தியும் ஒரு நிலைமை உடையதாகவே இருக்கின்றன.

தென் இந்திய மொழிகளை நீக்கிப் பார்த்தால் இந்தியாவில் கவிதை, உரைநடை ஆகிய இரண்டிலும் ஒன்று போல நிறைவுடைய இலக்கிய

மொழி உருது ஒன்றே. வங்காளியும் இந்தியும் அதனை அடுத்த பெருமையே உடையவை. ஆயினும் அண்மை வரையில் இவ்விலக்கியத்தில் ஒரு பெருங்குறைபாடு இருந்து வந்தது. எழுத்தாளர்கள் பாரசிகச் சொல், பாரசிக மரபு, பாரசிக உவமைகள், பாரசிக நாட்டுக் காட்சி ஆகியவற்றிலேயே திளைத்து இந்திய மொழியில் வெளிநாட்டிலக்கியம் பேணினர். கண் முன் கண்ட இந்திய வாழ்வில் கவனம செலுத்தவில்லை. ஆங்கிலக் கல்வி காரணமாக 'ஹாலி' 'இக்பால்' ஆகிய கவிஞர்கள் இச்செயற்கை முகமூடி அகற்றி விடுதலை ஒளி வீசினர்.

வருங்காலத்தில் உருது இந்தியாவின் பல்நிற நாகரிகத்தில் ஒருதலை மணியாய் இந்தியாவையும் இஸ்லாமையும இணைத்து நிற்க உதவும் பெருமை உடையது. இஸ்லாமிய உலகுக்கு இந்தியாவையும் இந்தியாவுக்கு இஸ்லாமின் நாகரிகத்தையும் விளக்கும் இணையற்ற கலைக்கருவியாய் அது அமையும் என்று உறுதியாக நம்பலாம். ●

எழுத்தாளர்கள்

புது எழுத்தாளர்களின் கதை கட்டுரைகளைப் 'பொன்னி' முழுமனதுடன் வரவேற்கிறது. பொன்னிக்குக் கட்டுரை யனுப்புவோர் கீழ்க்கண்ட விதிகளையும் கடைப்பிடிக்க வேண்டுகிறோம்.

1 கட்டுரைகளுடன் கடிதங்கள் வருவதைப் பொன்னி விரும்பவில்லை.

2 பொன்னியில் வெளியிடப்படாவிட்டால் கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கட்டுரையுடனேயே தபால் தலைகள் இணைத்திருக்க வேண்டும். தனியாக அனுப்பினால் கவனிக்க இயலாது.

3 வெளியிடக்கூடிய கட்டுரைகளாக இருந்தால் அறிவிக்கப்படும். இல்லையானால் தபால்தலை இணைத்துள்ள கட்டுரைகள் திருப்பி யனுப்பப்பெறும்.

4 எழுத்துத் தெளிவாக தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும்.

மூடப் பழக்கங்களை முறியடித்தோம்!
ஆயினும் நாங்கள் மாறைநாட்டானுக்கு
அடிமைகளா யிருக்கிறோம்!

★

"ஐந்துசாதிகள் அந்தநாள் இருந்தன.
கொந்தி எடுக்குமே குடிகளை அவைகள்!
மேலான சாதி வேலை செய்யாமல்
பாலும் சோறும் பருப்போடு நெய்யும்
உண்டு வாழுமே! ஊரில் மற்றவை
கண்டு நடுங்குமே கைகட்டி நிற்குமே!
கீழான சாதிக் கேடு கெட்டேனும்
கூழேயும் இன்றிக்குடிசையில் ஆய்குமே
அப்போது நானே ஆர் என்று கேட்டால்
தப்புடைய மேலான சாதியைச் சேர்ந்தோன்"

★

இப்படிச் சொன்னான் உழவன். "மூடக் கொள்கைகளை முறியடித்தோம். ஆயினும் நாங்கள் அடிமைகள்!" ஏன்?

●

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET. PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN


அச்சுத் தொழில் வளருகிறது
எல்லாவற்றையும், அச்சிலேற்றிக் காண
மனிதன் எண்ணிவிட்டான். எனவே அச்ச
கங்களிலே வேலைகளை முடித்துக் கொடுப்
பதிலே நெருக்கடி ஏற்படுகிறது.
என்றாலும் வாடிக்கைக்காரர்களுக்கு
குறித்த தவணையிலும் உயர்ந்த முறையி
லும் செய்து கொடுக்க எல்லா வகை
முயற்சிகளும் எடுத்துக்கொள்ளுகிறோம்.
செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழ ராஜ வீதி — புதுக்கோட்டை.